தமிழ் நாட்டில்

# சிந்துவெளி எழுத்தோவியம்

















பி.எல்.சாமி
ஐ.ஏ.எஸ்.





















சேகர் பதிப்பகம்

தமிழ் நாட்டில்
சிந்துவெளி எழுத்தோவியம்

தமிழ் நாட்டில்

# சிந்துவெளி எழுத்தோவியம்

அறிஞர்

**பி. எல். சாமி,** ஐ. ஏ. எஸ்.

முதன்மைப் பதிப்பாசிரியர்,
அறிவியல் களஞ்சியம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்

**சேகர் பதிப்பகம்**

புத்தக வெளியீட்டாளர் — விற்பனையாளர்
66 பெரியார் தெரு எம். ஜி. ஆர். நகர்
சென்னை - 600 078

## BIBLIOGRAPHICAL DATA


| | |
|---|---|
| Title of the Book | TAMIL NAATTIL SINDUVELI EZHUTTHOVIYAM |
| Author | P. L. SAMY B. Sc., (I.A.S.) |
| Language | TAMIL |
| Edition | First |
| Date of Publication | 23. 2. 1984 |
| Copyright | P. L. SAMY |
| Paper used | Double Crown White Printing |
| Paper weight | 11. 6 kg. |
| Size of the Book | 18 × 12. 5 cm. |
| Printing points used | 10 pt. |
| Number of Pages | 96 |
| Number of Copies | 1000 |
| Printer | Vallal Paari Achagam |
| Binding | Card Board |
| PRICE | Rs. 8. |
| Publisher | Sekar Pathippagam Madras - 600 078. |
| Subject | Archeology |

முதற் பதிப்பு பிப்ரவரி 1984
உரிமை ஆசிரியர்க்கு

விலை ரூ. 8.

அச்சிட்டோர் : வள்ளல் பாரி அச்சகம்
26, வள்ளல் பாரி தெரு, எம். ஜி. ஆர். நகர்
சென்னை - 600 078.

## நூல் உருவாக்கியோர்

| | |
|---|---|
| ஆசிரியர் | பி. எல். சாமி, ஐ. ஏ. எஸ். |
| முகப்போவியம் | கவிஞர் அமுதோன் |
| உருவச்சு | அண்ணாமலை |
| அச்சுக்கோப்பு | மு. ஹேமா, த. பூபதி, த. பாலு |
| அச்சிட்டவர் | கே. வி. தயாளன்<br>வள்ளல் பாரி அச்சகம், |
| முகப்பு அச்சிட்டோர் | வ. இராஜேந்திர குமார்<br>பெலிகன் இந்தியா<br>சென்னை-17 |
| பிழைதிருத்தம் | புலவர் த. கோவேந்தன் |
| நூல் கட்டமைப்பு | ஏ. உமாபதி |
| புகைப்படங்கள் தந்தவர் | பாகூர் புலவர் சு. குப்புசாமி |
| ஆக்கப்பணி | சு. புகழேந்தி |
| பதிப்பாளர் | வெள்ளையாம்பட்டு சுந்தரம்<br>சேகர் பதிப்பகம் |



# உள்ளடக்கம்

முன்னுரை 9

சிந்துவெளி முத்திரைகள் படங்கள் 17

பதிப்புரை நிலையும் நினைவும் 25

குறியீட்டு எழுத்துகள் சில படங்கள் 43

கீழ்வாலைக் குன்றும்
ஓவியங்களும் படங்கள் 50

தமிழகத்தில் புத்தொளி 53

காணப்பட்ட இடங்கள் 61

துணைவேந்தர் கருத்துகள் 62

கீழ்வாலை — ஒப்பீடு 65

மூன்று பகுதிகள் 71

ஆய்வுகள் 74

பெயர் விளக்கம் 79

சொல்லடைவு 85

8

# கீழ்வாலை ஓவியங்கள்



# முன்னுரை

இந் நூல், விழுப்புரத்திற்கு அருகில் உள்ள கீழ்வாலை என்ற ஊரிலே கண்டு பிடிக்கப்பெற்ற பாறை ஓவியங்களைப் பற்றியதாகும்.

வரலாற்றுக்கு முற்பட்ட இந்த ஓவியங்களுக் கிடையே முதன் முதலாகச் சிந்துவெளி நாகரிகக் குறியீட்டு எழுத்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

என் தலைமையில் இயங்கிவருகின்ற புதுவை வரலாற்றுக் கழகத்தைச் சார்ந்த பாகூர் புலவர் சு. குப்புசாமியும், வில்லியனூர் புலவர் ந. வேங்கடேசனும் இவ்வோவியங்களைக் கண்டு பிடிப்பதில் காட்டிய ஊக்கமும் பேருழைப்பும் மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். அனந்தபுரம் கோ. கிருஷ்ணமூர்த்தி முதல் தகவல் தந்தார். பின்னர் இக் கண்டுபிடிப்பு, செய்தித் தாள்களில் வெளியிடப்பெற்றது.

இந்தக் கண்டுபிடிப்பு, வரலாற்றுக்கு முற் பட்ட ஓவியங்களைப் பற்றிய ஒரு பெரும் புரட் சியை ஏற்படுத்தியது. தொல்பொருள் ஆய்வுத் துறை, வரலாற்றுத் துறை சார்ந்த அறிஞர்

பல்ரும் இந்தப் பாறை ஓவியங்களைக் காணச் சென்றார்கள்; ஆர்வத்தோடு ஆராய்ந்தார்கள்.

கீழ்வாலைக் குன்றில் காணப்படும் எழுத்து வடிவங்கள் சிந்துவெளிக் குறியீட்டு எழுத்துகளே என்று அறிஞர் பலரும் ஒப்புக்கொள்ளுகின் றார்கள்.

சிந்துவெளி நாகரிகத்தை முதன் முதலில் அகழ்வு செய்தவர் சர். ஜான் மார்ஷல் என்ற அறிஞராவார்.

இவர் மேற்கொண்ட அகழ்வாய்வில் கண் டெடுக்கப்பெற்ற பசுபதி போன்ற சிற்பம், இலிங்கம், யோனி, தாய்த் தெய்வச் சிற்பம் ஆகியவற்றை இவ் அறிஞர் நன்கு ஆராய்ந்தார்.

சிந்துவெளி நாகரிகம் ஆரியருடையது அன்று என அறிஞர் சர். ஜான் மார்ஷல் கூறினார். வேறு சில அறிஞர்களும் அவ்வாறே கருதினர்.

பின்னர், இந்த உயர் நாகரிகத்தைப்பற்றி ஆராய்ந்தவர் பம்பாய் தூய சவேரியார் கல்லூரி யின் வரலாற்றுக் கழகத் தலைவரான ஈராஸ் அடிகள் ஆவார்.

நன்கு ஆராய்ந்த அறிஞர் ஈராஸ் அடிகளார் 'இந்த நாகரிகம் பழந்திராவிட நாகரிகம்' என்று, தாம் எழுதிய 'தொல் பழங்கால நடுநில இந்துப் பண்பாட்டின் ஆய்வு' (Studies in Proto Indo Mediterranean culture) என்ற நூலில் விளக்கமாக எழுதினார்.

அங்குக் கிடைத்த முத்திரைகளில் உள்ள எழுத்துகளை ஈராஸ் அடிகளார் ஊன்றிப் படித்துக் காட்டினரர்.

அப்போது அவர் படித்தவற்றில் பல தவறுகள் இருப்பினும், அவருடைய அணுகுமுறை பற்றி யாரும் குறை கூற முடியாது.

ஆனால், அப்போது வரலாற்றறிஞர்கள் பலர், ஈராஸ் அடிகள்ாரின் கருத்துகளை ஏற்றுக் கொள்ளவில்லை. இப்போது மேலைநாட்டு அறிஞர்கள், இக் குறியீட்டு எழுத்துகளை ஆராய்ந்து, பெரும்பாலும் ஈராஸ் அடிகளாரின் அடிப்படைக் கொள்கையை நிலைநாட்ட முயன்று வருகின்றனர் என்பது கருதத்தக்கது.

இந்தக் குறியீட்டு (முத்திரை) எழுத்துகள் குஜராத் மாநிலத்தில் அகழ்வாய்வு செய்துள்ள லோத்தால், காலிபங்கன் என்ற இடங்களிலும் காணப்பட்டன.

ஆயினும், இப்பொழுது திடீரென்று தமிழ் நாட்டில் விழுப்புரம் அருகில், திருக்கோவிலூர் வட்டத்தைச் சார்ந்த கீழ்வாலையில் உள்ள பாறை ஓவியங்களுக்கிடையே காணப்பெறுவது பெரிய புதிராக உள்ளது.

புதுவை வரலாற்றுக் கழகத்தினர் இந்தப் பாறை ஓவியங்களைக் கண்டுபிடித்த பின்னர், அதன் தொடர்ச்சியாக, தமிழக அரசின் தொல் பொருள் ஆய்வுத் துறையினர் அப் பகுதியில் மூன்று நான்கு பாறை ஓவியங்களைக் கண்டு பிடித்தனர்.

அவற்றில் விலங்கு, மனித (உருவங்கள்) ஓவியங்கள் கிடைத்தன. ஆனால், இந்த ஓவியங்களில், கீழ்வாலை ஓவியத்தில் காணப்பெறும் சிந்துவெளி நாகரிகக் குறியீட்டெழுத்துகள் கிடைக்கவில்லை.

இந்தக் குறியீட்டெழுத்துகளை ஆராய்வதற்கு ஈராஸ் அடிகளாரின் நூலில் காட்டப் பெற்றுள்ள குறியீட்டெழுத்துகளையும் உருவப் படங்களையும் *அடிப்படையாகக் கொண்டு நான் இந்தக் கட்டுரையை எழுதியுள்ளேன். அவர் கருத்துகளையும், பிற அறிஞர்களின் கருத்துகளையும் சீர்தூக்கி என் கருத்துகளைத் தந்துள்ளேன்.

இக் கருத்துகள் முடிவானவை அல்ல என்று கூற விரும்புகிறேன்.

இன்று ஒரு சில இந்திய வரலாற்று அறிஞர்கள் சிந்துவெளி நாகரிகம் ஆரியருடன் தொடர்புடையது என்று கூறுகின்றனர்.

கணிப்பொறி (Computer) வழியாக ஆராய்ந்து வரும் வெளிநாட்டறிஞர்கள் யாதொரு பற்றுமின்றி, அவை பழந்திராவிடக் குறியீட்டெழுத்துகளே என்று கூறுகின்றனர்.

அண்மையில் அறிஞர் ஜான்மார் என்பவர் ஒரு நூலில், "இன்னும் முடிவு பெறாத மொகஞ்சதாரோ முத்திரை (குறி வடிவம்) பற்றித் திராவிடருடையது என்று பெரும்பாலான கருத்து நிலவுகிறது"

---

இந் நூலில் 18, 19, 20, 21, 22, 23 பக்கங்களில் காண்க.

(of recent years Dravidion has been the strongest Contender for language of the as yet undeciphered Mohanjadaro Seal character (A cultural History of India edited by A. L. Basham)

என்று எழுதியுள்ளார்.

எகிப்திய ஓவிய எழுத்துகளை, ரோசட்டா (Rosetta) என்னும் ஊரில் காணப்பெற்ற முத் திரையில் எகிப்திய, டெமாட்டிக், கிரேக்க மொழிபெயர்ப்புகளில் இருந்து அறிஞர்கள் கண்டு பிடித்தனர்.

அவ்வாறு இரு மொழி முத்திரைகள் கிடைக் குமாயின் சிந்துவெளிக் குறியீட்டெழுத்துகள் எந்த மொழியைச் சார்ந்தவை, எந்த நாகரிகத் தைச் சார்ந்தது என்பதைக் கண்டுபிடிக்கலாம்.

ஆனால், கீழ்வாலை ஓவியத்தில் காணப் பெறுகின்ற சிந்துவெளிக் குறியீட்டெழுத்துகள் சிந்துவெளி நாகரிகம் திராவிடருடையது என்பதற்கு ஒருவாறு சான்று தருகின்றன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இக் கருத்தினை நான் ஆங்கிலத்தில் ஒரு கட்டுரையாக எழுதினேன். அது தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் காலாண்டு வெளி யீடான Tamil Civilization (ஜூன் 1932) இரண் டாம் இதழில் வெளியாயிற்று. அக் கட்டுரையை வெளியிட்ட தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் அறிஞர் பெருந்தகை டாக்டர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கட்கு என் அன்பும் நன்றியும் உரியது.

ஆங்கிலக் கட்டுரையைக் கண்ணுற்ற சென்னை, சேகர் பதிப்பக உரிமையாளர் வெள்ளையாம்பட்டு சுந்தரம், தமிழிலே அதனை மேலும் விளக்கமாக எழுதித் தருமாறு ஆர்வத்துடன் கேட்டார். அவர் கல்வெட்டு, தொல்பொருள் ஆய்வு, வரலாறு, இதழியல், அறிவியல் முதலான அரிய துறைகளைச் சார்ந்த சிறந்த நூல்களையே விரும்பி வெளியிட்டு வருகின்றவர்.

நான் பல ஆண்டுகளாக எழுதிவரும் சங்க இலக்கியங்களில் அறிவியல் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து, அவரது பதிப்பகத்தின் வாயிலாக,

சங்க நூல்களில் மீன்கள்
சங்க நூல்களில் மணிகள்
சங்க நூல்களில் விந்தைப் பூச்சி
இலக்கியத்தில் அறிவியல்
இலக்கிய ஆய்வு

எனும் நூல்களாகத் தொடர்ந்து அழகுற வெளியிட்டு வருகிறவர் அவர்.

அவரது விருப்பமிகு தூண்டுதலால், எல்லாரும் எளிதில் விளங்கிக் கொள்ளுமாறு தமிழில் இதனை எழுதியுள்ளேன். படிப்போர் மனத்தில் நன்கு பதியும் வண்ணம், விளக்கம் தரும் வகையில் பல படங்களை அமைத்து, இச் சிறு நூலினை எழிலுறப் பதிப்பித்து வெளியிடும் பதிப்பாளர் சுந்தரம் பாராட்டுக்குரியவர்.

தமிழ் மாணவர்கள், ஓரளவேனும் வரலாற்றார்வம் கொண்டவர்கள் சிந்துவெளி நாகரிகம் பற்றியும், நம்நாட்டின் தொன்மைச் சிறப்பு மிக்க வரலாற்றைப் பற்றியும் மேலும் ஊக்கமுடன் அறிய இச் சிறு நூல் பயன்படும் என்று நம்புகின்றேன்.

ஆய்வுகள் மேலும் விரிவடைந்து, தமிழினப் பெருமை நன்கு ஒளிபெற வேண்டுமென்று விரும்புகின்றேன்.

பி. எல். சாமி

தலைவர்,

புதுச்சேரி வரலாற்றுக் கழகம்.

# சிந்துவெளி முத்திரைகள்

அடுத்த பக்கங்களில் காண்க

| SL No. | OBVERSE | REVERSE |
| --- | --- | --- |
| 1 |  |  |
| 2 |  |  |
| 3 |  |  |
| 4 |  |  |
| 5 |  |  |
| 6 |  |  |
| 7 |  |  |
| 8 |  |  |

| SL. No. | OBVERSE | REVERSE |
|---|---|---|
| 9 |  |  |
| 10 |  |  |
| 11 |  |  |
| 12 |  |  |
| 13 |  |  |
| 14 |  |  |
| 15 |  |  |
| 16 |  |  |

| SL. No. | OBVERSE | REVERSE |
|---|---|---|
| 17 |  |  |
| 18 |  |  |
| 19 |  |  |
| 20 |  |  |
| 21 |  |  |
| 22 |  |  |
| 23 |  |  |

| SL. No. | OBVERSE | REVERSE |
| --- | --- | --- |
| 24 |  |  |
| 25 |  |  |
| 26 |  |  |
| 27 |  |  |
| 28 |  |  |
| 29 |  |  |
| 30 |  |  |
| 31 |  |  |





# நிலையும் நினைவும்

வரலாறு உணர்ச்சி யூட்டுவது; உயர்வை நாட்டுவது.

பழைய வரலாறு புதிய வரலாற்றை உருவாக்கும் தன்மையுடையது; வன்மையுடையது. முன்னோர் வாழ்வும் முற்காலச் சமுதயா அமைப்பும் நமக்குப் புத்துணர்ச்சி யூட்டுவனவாம்.

பழமையான வரலாறு என்பது உலகில் எல்லாருக்கும் இருப்பதாகச் சொல்ல இயலாது. ஒரு சில நாடுகள்—ஒரு சில இன மக்கள் மட்டுமே பழம் பெரும் வரலாற்றுக்கு உரிமையுடையவர்களாக இருக்கிறார்கள்.

நாம் வாழும் தமிழ்நாடு தொன்மைச் சிறப்பு உடையதாயிருக்கிறது. நமது தமிழரினம் மிகப் பழங்காலத்துப் பெருமை மிக்க வரலாற்றைப் பெற்றிருக்கிறது. 'இத்தகைய நீண்ட நெடுங்கால மானிட வரலாற்றுக்குரியவர்கள் நாம்' என்று எண்ணும்போது நெஞ்சம் பெருமிதம் கொள்கிறது.

> ''நமது முன்னோர்கள் சிறந்தவர்கள்; உயர்ந்த பண்பாடுகளைக் கொண்டு வாழ்ந்தவர்கள்: வாழ்க்கையில் பல்வேறு துறைகளிலும் மாபெரும் சாதனைகளைச் செய்தவர்கள். அவர்களது மரபிலே தோன்றியவர்கள் நாம்; அந்தப் பெருமையை நமது நெஞ்சில் நிறுத்தவேண்டும். புகழ் மிக்க நம் மூதாதையரைப்

போற்றவேண்டும்; அவர்களைப் போன்றும் அவர்களைவிட மேலாகவும் நாம் புதுமைகளைச் செய்ய வேண்டும்; பெருமைகளைக் குவிக்கவேண்டும்''

என்னும் எண்ணமும் எழுச்சியும் நம்மிடம் நன்கு வேர்கொண்டு விளைந்து செழிக்கவேண்டும்.

எந்தையும் தாயும்
மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே!—அதன்

முந்தையர் ஆயிரம்
ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே!—அவர்

சிந்தையில் ஆயிரம்
எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே!—இதை

வந்தனை கூறி
மனத்தில் இருத்திஎன்
வாயுற வாழ்த்தேனோ!

என்று எக்காளமிடுகின்றார் மகாகவி பாரதியார். அத்தகைய பொங்கும் உணர்ச்சியும், பூரிப்பும், பெருமிதமும் நம் ஒவ்வொருவர் நெஞ்சிலும் சுரந்து பீறிட்டெழுந்து வெள்ளமெனப் பாய்ந்தோட வேண்டும்.

இந்தியத் துணைக் கண்டத்தில் ஆங்கிலேயர் வருகைக்குப் பின்னர் வாணிப வழியில் அரசுகள் பல அழிந்தன. இந்தியப் பெருநாடு பிரிட்டிஷாரின் பிடியில் சிக்கிக் கொண்டது. அதன்தொடர்ச்சியில் சிதைவுகள், அழிவுகள், மாறுதல்கள் நிகழலாயின.

பல தீமைகள், இழப்புகள் தோன்றின;

சில புதுமைகள், மாறுதல்கள் தோன்றின.

நாடு பிடிக்க வந்த ஆங்கிலேயர்களிடையே நல்ல அறிஞர்கள் சிலரும் இருந்தனர்; ஆராயும் அறிவும் ஆர்வமும் ஆற்றலும் அமைந்தவர்களாகச் சிலர் நம் நாட்டிற்கு வந்தனர். அவர்கள் இந்தியாவில், பல நூற்றாண்டுகட்கு முன்பே தோன்றி வளர்ந்திருந்த அரிய அறிவுச் செல்வங்களை, கலை, பண்பாடுகளைக் கண்டு வியந்தனர். அவ்வாறு கண்டதைத் தங்களுடைய ஆர்வத்தால், வியப்பால், ஊக்கத்தால் தொடர்ந்து ஆராய முற்பட்டனர்.

பலரது அயரா உழைப்பும் கண்டுபிடிப்புகளும், ஆய்வுகளும் இந்திய நாட்டின் ஏற்றமிகு பெருமையைப் புலப்படுத்தின. அதன் பழமையான — சிறந்த நாகரிகம்மிக்க மக்களுடைய வாழ்க்கைத் தடங்களை—வெற்றி முகட்டில் வாழ்ந்திருந்த அடையாளங்களைக் கண்டு அறிஞர் வியப்படைந்தார்கள்; அதனைப் பரந்த உலகுக்கு வெளிப்படுத்தினார்கள்.

சிந்துநதி பாய்கின்ற பகுதியில்
அரப்பா, மொகஞ்சதாரோ

எனும் இரு இடங்களில் மண்மேடுகளைத் தோண்டி அறிஞர்கள் ஆராய்ந்தனர். அங்கே பூமிக்கு அடியில் புதையுண்டு, அடுக்கடுக்காகக் காணப்பெற்ற நகரங்களின் இடிபாடுகள் தமது பழைமையான வரலாற்று ஒளியைப் புதிதாக வெளிப்படுத்திக் கொண்டன.

உலகத்திற்குக் கிடைத்த வரலாற்றுச் சுரங்கம் என சிந்துவெளி அகழ்வாய்வுகள் ஒருமித்த கருத்தினை அறிஞர்களிடையே உருவாக்கின.

அரப்பா, மொகஞ்சதாரோ என்னும் இரு இடங்களிலும் எண்ணற்ற பொருள்கள், தடயங்கள், சுவர்கள், கிணறுகள் காணப்பெற்றன. அவற்றைப் பற்றிய ஆராய்ச்சியின் பயனாக **சிந்துவெளி நாகரிகம்** எனும் புதிய வரலாற்றுச் சுடர் ஒளி பரப்பியது.

சிந்துவெளி நாகரிகம் என்பது மிகப் பழமையானது; ஆரியர் எனும் ஒரு பிரிவு மக்கள் இந்தியாவுக்குள் வருவதற்கு முன்னரே, அங்கிருந்த மக்கள் சிறந்த வாழ்க்கை நெறிமுறைகளைக் கைக்கொண்டு, உயர்ந்த வாழ்க்கை வாழ்ந்தனர் என்ற உண்மை நிலையை அறிஞர்களால் உணரமுடிந்தது. அத் தனித்தன்மை மிக்க மக்கள், இந்தியாவின் தென்பகுதியில் மிக முற்காலத்தில் வாழ்ந்த திராவிடர்கள் எனப்படும் இனத்தவராகக் கருதலாம் என்றும் பல அறிஞர்கள் கூறுகிறார்கள்.

வரலாற்று ஒளி மேலும் மேலும் விரிந்தது; பரந்தது. இருள் மூடிக்கிடந்த எத்தனையோ இடங்கள் ஒளிபெற்று உண்மைநிலை விளங்கலாயிற்று.

ஆங்காங்கே, ஆதி மக்களின் அன்றைய அரிய பொருள்கள் பல காணக் கிடைக்கின்றன; கண்டுபிடிக்கப் பெறுகின்றன.

நமது தமிழ்நாட்டில் பல இடங்களில் பழங்கால மக்கள் பயன்படுத்திய அரிய பொருள்கள் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளன.

கொங்குநாடு எனும் கோவை மாவட்டப் பகுதியில் சிறந்த சான்றுகளை உறுதிப்படுத்தும் பல பொருள்கள் கிடைத்துள்ளன.

சங்க காலத்து அதியமான் — ஔவையார் புகழ் வளர்த்த தகடூர் நாடு என்னும் இன்றைய தருமபுரி மாவட்டப் பகுதியிலும் எண்ணற்ற பழம்பொருள்கள் பரவலாகக் காணப்பெறுகின்றன.

கோவையும் தருமபுரியும் மட்டுமா?

சேலம் பகுதியிலும் சீர்மிகு வரலாற்றுச் சின்னங்கள் சிதறிக் கிடக்கின்றன; சேமிக்கவும்படுகின்றன.

மதுரை, திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, இராமநாதபுரம் திருநெல்வேலி, ஈரோடு, சென்னை, செங்கற்பட்டு, வடஆர்க்காடு, தென்னார்க்காடு முதலான மாவட்டங்களிலும் தொன்மைமிகு வரலாற்றுச் சின்னங்கள் கண்டெடுக்கப் பெற்றுள்ளன. தனித்து இயங்கும் தமிழ்ப் புதுவை மாநிலத்திலும் தாழ்விலா அளவில் பழமைமிகு பொருள்கள் பலப்பல கண்டெடுக்கப் பெற்றுள்ளன.

புதுவை நகருக்கடுத்துள்ள அரிக்கமேடு எனும் இடத்தில் குறிப்பிடத்தக்க அகழ்வாய்வு செய்யப் பெற்றது. இந்தியத் தொல்பொருள்துறை இயக்குநர் மார்ட்டிமர் வீலர் எனும் ஆராய்ச்சி அறிஞர் முறையான அகழ்வாய்வு செய்தார். அங்கே கிடைத்த அரிய பொருட்கள் உரோமானியரது வாணிபத் தொடர்புகளை வரையறுத்து உரைத்தன. வரலாற்றில் அரிக்கமேடு அகழ்வாய்வு ஒரு சிறந்த இடம் பெற்று விளங்குகிறது.

இத்தகைய தொடர்ந்த கண்டுபிடிப்புகளில் ஒரு புதிய திருப்பம் அண்மையில் (1982-ஆம் ஆண்டின் இடைப் பகுதியில்)—தோன்றியது. அளவற்ற வியப்பால் அறிஞர் உலகம் அதிர்ந்தது. ஆய்வாளர்கள் ஆரவாரம் செய்தனர். புதிய எழுச்சியும் பரபரப்பும் ஏற்பட்டன.

நாளேடுகள் அச்செய்திகளைக் குவித்தன. வானொலி வாயார வெளிப்படுத்தியது. ''டெலிவிஷன்'' என்னும் தொலைப்படக் காட்சிக் கருவியும், முற்காலம் காட்டும் அரிய அந்தக் காட்சிகளைப் படமாக்கி, நாடெங்கிலுமுள்ள மக்களுக்கு நல்லதொரு வரலாற்று விருந்தினை வழங்கிப் பெருமையுற்றது.

இதற்குரிய இடம் எது?

கீழ்வாலை எனும் சிற்றூர் சார்ந்த குன்றுப் பகுதி.

கீழ்வாலைக் கிராமம் எங்குள்ளது?

இதோ என் நெஞ்சம் இனிக்கிறது. ஏன்? ஒருவித தற்சார்புள்ள மனநிலை! நான் பிறந்த ஊரான வெள்ளையாம்பட்டுக்கு அருகிலுள்ளது கீழ்வாலை. இது ஒன்று தான் என்றன் பெருமிதத்துக்கும் பெருமகிழ்வுக்கும் நிலைக்களமாயிற்று.

பல்லவர் பெருமையைப் பேசும் கலைக்கோயில் எங்களூருக்குப் பக்கத்திலே உள்ளது. ஆம்; நம் அரசே பாராட்டி வெளிப்படுத்தாமல் விட்டதால், அது பதுங்கிக் கிடக்கிறது என்று பழி கூறத்தக்க அளவில், மறக்கப்பட்ட நிலையில் உள்ள மலைக்கோயில் ஒன்று உள்ளது.

அதுதான் பனமலை! 'அனந்தபுரம்—பனமலை' என்று மக்களால் அழைக்கப் பெறும். அவ்வூர் மலைக்கோயிலும் வரலாற்றில் குறிப்பிடத்தக்க சிறப்பிடம் பெற்றதாகும்.

மாமல்லபுரம் மணம் பரப்புகிறது; புகழப்படுகிறது; காஞ்சிபுரம் கயிலாய நாதர் கோயிலும் கருத்தில் கொள்ளப் பெறுகிறது; காண வழி செய்யப்பெற்றுள்ளது; மேலும் விளம்பரம் தரப்படுகிறது.

மேற்கண்ட இரு கோயில்கள் கட்டப் பெற்ற காலத்திலேயே கட்டப்பெற்றதுதான் பனமலைக் கோயில். அவ்விரண்டு கோயில்களையும் உருவாக்கிய பல்லவப் பேரரசன் இராஜசிம்மன் (இரண்டாம் நரசிம்மன்) கட்டியதே பனமலை மலைக்கோயில்.

எட்டாம் நூற்றாண்டின் இணையற்ற கலைச் சின்னங்களாகிய இம் மூன்றும் பல்லவர் காலக் கலைத்திறனுக்கு புகழ் முடிகள் என்று கூறலாம். தவறாகாது.

முதல் இரு கலைக் கோயில்களுக்கு முழு விளம்பரம் தருகின்ற நமது தமிழக அரசு, மூன்றாவதாக உள்ள—சிறந்த கலைப் படைப்பை, வரலாற்றின் வைர மணி முடியை மறந்தது ஏனோ? பனமலையில் இருப்பதால் அது

வீணோ? சுறுசுறுப்பான சுற்றுலாத்துறை தன் சொந்தம் மறக்கலாமோ?

உயர்ந்த கலைப் படைப்பை ஊரார்க்கும் உலகோர்க்கும் காட்சி விருந்தாக்க வேண்டாமா? வரலாற்றை முழுமையாக உணரச் செய்ய வேண்டியது நமது கடமையல்லவா?

காலம் மாறும்; கருத்தும் மாறலாம்; பனமலை மலைக் கோயிலின் சீரிய கலையொளி பாட நூல்களிலும், வரலாற்று வெளியீடுகளிலும், காட்சி யரங்குகளிலும், கருத்தரங்கு—கவியரங்குகளிலும் தகுந்தவாறு தனி இடம் பெறும் என்று நம்புகின்றேன்.

இன்றைய வெளிச்சத்தில் எடுத்து வைக்கப் பெற்றிடாத எழில் மிகு அந்தப் பனமலை எனது ஊருக்கு வடக்கில் இரு 'கிலோ மீட்டர்' தொலைவில் உள்ளது.

எங்கள் ஊருக்குத் தென்புறத்தில் ஏறத்தாழ எட்டு 'கிலோ மீட்டர்' தொலைவில் கீழ்வாலை எனும் சிற்றூர், இதோ வெளிச்சம் பெற்று ஒளிப்படமாக உலகோர் கண்களுக்குக் காட்சியளிக்கின்றது.

ஒருபுறம் இருந்த ஏக்கத்திற்கு மாற்றாக, மறுபுறம் கீழ்வாலை தந்த புதுச் செய்தி, எக்காளமிட்டு இன்பத்தால் குதித்தாடச் செய்தது. அந்தப் பேரின்ப வெள்ளத்திலேதான் இந்த வரலாற்று ஏடு மிதந்து உலா வருகிறது.

எனது ஊருக்குப் பக்கத்தில் மிகப் பழைய காலத்து மிகச் சிறந்த வரலாற்றுச் சான்று கிடைத்திருப்பதைக் கேட்டதும் நான் அடைந்த உணர்ச்சியை எப்படி எழுத இயலும்! நானும் என் நண்பர்களும் சென்னையிலிருந்து சென்று பார்த்தபோது அடைந்த இன்பத்தை என்னென்று சொல்வேன்; எவ்வாறு விளக்குவேன்!

நானும் நண்பர் ஆசிரியர் முத்து. எத்திராசன் எம்.ஏ. அவர்களும் சென்றபோது எங்களுடன் வந்து இடம் காட்டி,

வண்ண ஓவியங்களையும் காட்டியவர்களை எப்போதும் மறவோம்.

அனந்தபுரம் கோ. கிருஷ்ணமூர்த்தி பி. ஏ.,
புதுவை வில்லியனூர் புலவர் ந. வேங்கடேசன்.

இவர்கள் இருவரும் கல்வெட்டாய்வாளர்கள்.

திறமை மிக்க கல்வெட்டு ஆய்வாளரான புதுவைப் பாகூர் புலவர் சு. குப்புசாமி அவர்கள் புதுச்சேரி வரலாற்றுக் கழகத்தில் உறுப்பினராயும் செயல்படுகிறார். புதுவை மாநிலக் கல்வெட்டுகளை நன்கு படித்தறிந்தவர். இவருடன் சேர்ந்து ஆய்வுப் பணிகளில் துணைவர்களாக இருப்பவர்களே மேற்குறிப்பிட்ட இரு நண்பர்கள்.

எனது சேகர் பதிப்பகத்தில் வரலாற்று நூல்களுக்கு எவ்வளவு முதலிடம் உண்டோ அந்த அளவு முதலிடம் பெற்றவர் புலவர் குப்புசாமியும் அவரது குழுவினரும்.

1982 ஆகஸ்ட் திங்களில் நான் முதன் முதலில் கீழ்வாலை வண்ண ஓவியங்களைப் பார்த்த காட்சியின் முழு அளவும் நெஞ்சில் அப்படியே நிலைத்து நிற்கிறது.

தென்னார்க்காடு மாவட்டம் விழுப்புரம், திருவண்ணா மலை பெருஞ்சாலையில், விழுப்புரத்திலிருந்து மேற்கில் 23 'கிலோ மீட்டர்' தொலைவில் கீழ்வாலைச் சிற்றூர் உள்ளது. இவ்வூருக்கு இரு புறங்களில், கிழக்கில் ஒதியத் தூர்—மேற்கில் கண்டாச்சிபுரம் எனும் ஊர்கள் உள்ளன.

வேறு பல இடங்களில் காணப்படுவது போலவே இங்குள்ள இரத்தக் குடைக்கல் ஓவியங்கள் அனைத்தும் செவ்வண்ணக் கோடுகளாகவே அமைந்துள்ளன. செடி கொடிகளிலிருந்து அக்காலத்து மக்கள் செவ்வண்ணக் கலவையைச் செய்திருக்கிறார்கள். அதனையே அவர்கள் உபயோகப்படுத்தியுள்ளனர். சிவப்பு வண்ணமாக இருப்ப தால் அவ்வோவியங்கள் உள்ள குன்றினை 'இரத்தக்

குடைக்கல்' என்று பிற்கால மக்கள் அழைத்ததாக நாம் கருத வேண்டியுள்ளது. இக்காலத்தில் 'பசுநாத்திக் கல்' என்று அங்குள்ளோர் கூறுகின்றனர்.

நீண்ட நெடுங் காலமாக அவ் வண்ண ஓவியங்கள் சிதைக்கப்படாமல், சீரழிக்கப்படாமல் இருப்பது ஒரு விந்தையே எனலாம். காலங்காலமாக அப்பகுதி மக்களிடம் தொடர்ந்து இருந்து வந்துள்ள நம்பிக்கையும் அச்சமும் அதற்குத்துணை புரிந்துள்ளன என்று கருதலாம்.

அந்த இடத்தில் பயங்கரமான தெய்வசக்தி இருப்பதாக, பிற்காலத்து மக்கள் நம்பியிருக்க வேண்டும்; அதை உறுதிப்படுத்தும் ஒரு செய்தியும் இங்கு நினைவுகொள்ளத் தக்கதாயுள்ளது.

> ஐம்பதாண்டுகட்கு முன்பு வரை — கீழ்வாலைக்கு வடபுறமுள்ள காடுகளிலிருந்து பழங்குடி மக்களில் சிலர், ஆண்டுதோறும் குறிப்பிட்ட ஒரு நாளில் இரத்தக் குடைக்கல்லுக்கு அருகில் வந்து படையல் இட்டு விழா நடத்திச் செல்லும் வழக்கம் இருந்தது'

என்று மூத்தவர்கள் கூறும் செய்தி நாம் கவனிக்கத் தக்கதாகும்.

அச்ச உணர்ச்சி காரணமாகவே அண்டை அயலில் உள்ள சிற்றூர் மக்கள் அவ்வோவியங்களை அணுகாமல் இருந்திருக்கின்றனர்.

விலக்கப்பட்ட, மக்கள் நடமாட்டமற்ற பகுதியாகவே அக்குன்றுசூழ் நிலப்பகுதி நெடுநாட்களாக இருந்துள்ளதை நாம் அறிய முடிகிறது.

ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதாக எண்ணத் தகும் அவ் வண்ண ஓவியங்களை வரைந்த மக்கள் வாழ்ந்த அப்பகுதி, தொடர்ந்து பிற்காலத்திலும் மக்கள் வாழ்விடமாக இருந்து வந்துள்ளதையும் நாம்

உணரலாம். அதை மெய்ப்பிக்கத்தக்க சான்றுகளும் பல கிடைத்துள்ளன.

பலவகை மட்பாண்ட ஓடுகள் — கருப்பு சிவப்பு நிறத்தில் நிரம்பக் கிடைத்துள்ளன. சில ஓடுகளில் கோடுகள் அழகுறத் தீட்டப் பெற்றுள்ளன.

மேலும், அங்கே இறந்தவர்களை அடக்கம் செய்யும் முதுமக்கள் தாழிகளின் சிதைந்த பகுதிகளையும் காண்கிறோம். அவை கி. பி. முதலிரண்டு நூற்றாண்டு காலத்தவை என்று கருதத் தக்கவையா யுள்ளன.

இரத்தக்குடைக்கல்லுக்குப் பக்கத்தில் ஒரு பாறையில் உரல் போன்ற ஒரு குழி குடையப் பெற்றுள்ளது. குழியின் பக்கமாகக் நல்லெழுத்துகள் காணப்பெறுகின்றன. அவை பத்தாம் நூற்றாண்டின் வரலாற்றை வெளிப்படுத்துகிறது. அக் கல்வெட்டு இராஷ்டிரகூட மன்னருள் ஒருவரான மூன்றாம் கிருஷ்ணன் என்பவனின் 24-ஆம் ஆண்டுக் (கி. பி. 983) கல்வெட்டு என்று கூறுகிறார் பாகூர் சு. குப்புசாமி.

ஐந்து வழிகள் கூடுவதாக அமைந்துள்ள குகை போன்ற ஒரு குன்று காண்போரை மலைக்கச்செய்கின்றது. இன்று இக் குன்றை ஒட்டிய நிலம் புன்செய் விளைநிலமாகத் திருத்தம் பெற்றுள்ளது.

செஞ்சி, உளுந்தூர்ப்பேட்டைப் பகுதிகளில் காணப்பெறுகின்ற பாறைக் குழிகள் போன்றதே கீழ்வாலையில் உள்ள பாறைக் குழியும்.

இங்கு ஒரு தனிச் சிறப்பும் உள்ளது. சிந்துவெளியைச் சார்ந்த அரப்பா, மொகஞ்சதாரோ, குஜராத்தைச்சார்ந்த லோத்தால், இராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த காலிபங்கன் ஆகிய இடங்களில் காணப்பெற்ற குறியீடுகள் போன்றவை கீழ்வாலையிலும் காணப்படுகின்றன. இக் குறியீடுகள் பண்டைய எழுத்துகளாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இந்த எழுத்துகள் ஐந்தும் தனித் தன்மையைப் பெற்றுள்ளன. சிந்துவெளி தவிர வேறெங்கும் காணப்படாத இந்த எழுத்துகள் ஆராய்ச்சியாளர் களிடம் புத்தெழுச்சியைத் தோற்றுவித்துள்ளன.

அனந்தபுரம் நண்பர் கோ. கிருஷ்ணமூர்த்தி முதலில் கீழ்வாலை ஓவியங்களைக் கண்டுபிடித்தார். அவர், பாகூர் சு. குப்புசாமியிடம் கூறி அழைத்துச் சென்று காண பித்தார்; அவருடன் வில்லியனூர் ந. வேங்கடேசனும் சென்றார். புதுவை வரலாற்றுச் சங்க உறுப்பினர்களான இவ்விருவரும், அச் சங்கத்தின் தலைவரும், சிறந்த சங்க நூல் அறிவியல் அறிஞரும், புதுவை மாநில ஆட்சித் தலைவரும் (கலெக்டர்) ஆகிய அறிஞர் பி. எல். சாமி ஐ. ஏ. எஸ். அவர்களிடம் தாங்கள் கண்டுபிடித்த பாறை ஓவியங்களைப்பற்றித் தெரிவித்தனர்.

சங்க நூல்கள் பற்றிய அறிவியல் ஆய்வுடன் தொல் பொருள் — கல்வெட்டு — சிற்ப ஆய்வுகளிலும் ஆர்வம் கொண்டவரான அறிஞர் பி. எல். சாமி ஐ. ஏ. எஸ். அவர்கள் விரைந்து சென்று கீழ்வாலை ஓவியங்களைக் கண்ணுற்றார். அவருடன் புதுவை மாநில ஆளுநர் அவர்களும் சென்று கண்டு வியப்படைந்தார். பிறகு ஆய்வு உலகமே அங்கு படையெடுத்தது, அனந்தபுரம் கோ. கிருஷ்ணமூர்த்தி, 'தினமணிசுடர்' (1-8-1982) ஞாயிறு மலரில் கீழ்வாலைக் கண்டுபிடிப்புப் பற்றிய கட்டுரையை முதலில் வெளியிட்டார்.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையில் இதே பகுதியில் செத்தவரை, புறாக்கல், குளிர்சுனை, பாடியந்தல், ஆலம்பாடி ஆகிய இடங்களில் மேலும் அரிய வண்ண ஓவியங்களைக் கண்டுபிடித்தனர். இவ்வோவியங் களில் மான், மீன், முள்ளம்பன்றி, காளை, கன்று, மனித முகமூடி, போன்ற உருவங்கள் தெளிவாகத் தீட்டப்

பட்டுள்ளன. இவைபற்றி ஒரு தனி நூல் எனது நிலையம் வெளியிட இருக்கிறது.

அறிஞர் பி. எல். சாமி ஐ. ஏ. எஸ். அவர்கள் தமது ஆய்வைத் தொடங்கினார். முந்தைய கண்டுபிடிப்பு களோடு ஒப்பிட்டு ஆராய்ந்தார். தமது கருத்தினை தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் காலாண்டு வெளி யீடான Tamil civilization என்னும் ஆங்கில (தமிழ் நாகரிகம்) இதழில் (Val. 1. No. 2, ஜூன் 1983) ஒரு கட்டுரையாக வெளிப்படுத்தினார்.

நம் ஊர்ப் பகுதியில் கண்டுபிடிக்கப் பெற்ற வரலாற்றுக்கு முற்பட்ட வண்ண ஓவியங்கள்பற்றித் தமிழகப் பொது மக்களும் மாணவர்களும் நன்கு அறிய வேண்டும்; அதன் மூலம் வரலாற்று உணர்வும் வரலாற்று ஆர்வமும் மக்களிடம் பெருகி வளரவேண்டும் என்று நான் மிகவும் விரும்பினேன். அதன்பொருட்டுத் தமிழில் விளக்கமாக எழுதித் தருமாறு அறிஞர் பி. எல். சாமி ஐ. ஏ. எஸ் அவர்களைக் கேட்டுக்கொண்டேன்.

அவர் இப்பொழுது தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஓர் உறுப்பாகச் செயல்படுகின்ற—சென்னை யில் உள்ள களஞ்சிய மையம் என்னும் (கலைக் களஞ்சியம் உருவாக்கும்) அலுவலகத்தில் அறிவியல் பகுதிக்கு முதன்மைப் பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்றுப் பணி யாற்றி வருகிறார். என் ஆர்வத்தை யொட்டி, எல்லார்க் கும் வரலாற்றுணர்வும் வரலாற்றில் ஓரளவு தெளிவும் தரத்தக்க எளிய முறையில் விளக்கமாக ஒரு கட்டுரை எழுதித் தந்தார். அவர்கட்கு என் நன்றி உரியதாகும். தமிழகமே அவர்கட்குக் கடமைப்பட்டுள்ளது.

தமிழக அரசும் பல்கலைக் கழகங்களும் அவரது 25 ஆண்டுக்கால சங்கநூல் பற்றிய அறிவியல் ஆய்வுக்காக, அவரை அடையாளம்கண்டு பாராட்ட இதுவரை முற்பட வில்லை. நல்லறிஞர் பலரும் நூலறிவு மிக்கவர் பலரும்

இதுபற்றிக் கவலைப்படுகின்றனர். 'அரசியல் பக்கம் சாராத தனித்தன்மை மிக்க—அமைதியான ஆய்வுப் புரட்சியாளராக அவர் இருப்பதே ஒரு குறையோ' என்று எண்ணத் தோன்றுகிறது. கல்வித்துறையும் பல்கலைக் கழகங்களும் அரசும் அவரைப் பயன்படுத்தாமல் விட்டது நாட்டிற்குப் பேரிழப்பே யாகும்.

இப்பொழுது, தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தர், செயல்திறன் மிக்க நல்லறிஞர் வ. அய். சுப்பிர மணியம் அவர்கள் அவரது ஆற்றலறிந்து, அவரிடம் அறிவி யல் கலைக்களஞ்சியம் தொகுத்திட முதன்மைப் பதிப்பாசிரியர் பொறுப்பை ஒப்படைத்திருப்பது பாராட்டுக்குரியதாகும். இந்திய அரசுப் பதவியிலிருந்து ஓய்வு பெறுமுன்னரே துணைவேந்தர் அவர்கள், அவரை இப் பொறுப்பேற்கச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தனித் தகுதிமிக்க அறிஞர் பி. எல். சாமி ஐ. ஏ. எஸ். அவர்கள் எழுதித்தந்த கட்டுரையை ஒரு சிறு நூல் வடிவில் நாட்டுக்கு அளிக்க நான் விரும்பினேன்.

ஐந்து ஆறு ஆண்டுகளாகவே நம் தமிழக அரசுக்குக் களங்கமும் கெட்ட பெயரும் தரத்தக்கவகையில் பொது நூலகத்துறை செயல்படாமல் இருந்து வருகிறது. அங்கே தமிழ் மக்களின் வரிப் பணம் வெறும் சம்பளமாகப் பாழாக்கப்பட்டு வருகிறது; நூலக நெறிமுறைகளைப் புறக்கணித்துவிட்டு — வாசகர்களாகிய பொது மக்களுக்கு பத்திரிகைகளை மட்டுமே வாங்கித் தந்து படிக்கச் செய்து வருகிறது. தமிழ்ப் புத்தகங்களை வாங்க முனைவதில்லை. உடனுக்குடன் புத்தக அறிவு பரவுமாறு காரியமாற்றுவ தில்லை. இயக்குநர்களை அடிக்கடி மாற்றுவதனாலும் தடைகள்; இயக்குநர்களின் ஆர்வமின்மையாலும் பெருங் குறைகள்.

நூலகங்களுக்குப்போய் வாசர்களிடம் உறவாடி அறிவுப் புரட்சி—அறிவு வளர்ச்சிக்கு வழிசெய்ய வேண்டிய தமிழ்

நூல்கள், எழுத்தாளர்களிடமும் புத்தகப் பதிப்பாளர் களிடமும் (கட்டிவைத்து) சிறைவைக்கப் பெற்றுள்ளன. எளிய நிலையிலுள்ள தமிழ்ப் பதிப்பாளர்களின் இன்னல் களை இங்கே எழுதி வெளிப்படுத்த இயலாது. பொருளாதார முடக்கமும் இச் சிறுதொழில் நொறுக்கி அழிக்கப்படும் கொடுமையும் என்று தீருமோ? தமிழ்ப் புத்தக உலகம் எப்போது பிற இடங்களைப் போன்று உரிமையுடன் — செழுமையுடன் நடமாடுமோ தெரிய வில்லை.

கல்வித்துறையில் சுறுசுறுப்பாகச் செயல்பட்டு, பல ஆக்கங்களை அடுக்கடுக்காகச் செய்துவரும் நமது தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கள் பாராட்டுக்குரியவர். ஆனால் அவர் நூலகத்துறை—நூல் பதிப்புத்துறை, அவற்றின் வாயிலாகத் தோன்ற வேண்டிய அறிவு வளர்ச்சி, சிறந்த அறிவு மிக்க சமுதாய வளர்ச்சிபற்றிச் சிறிதும் கருத்துச் செலுத்தாமல், இருக் கிறார். இது நடைமுறைக் காட்சி. சரியான, உறுதி யான, நேர்மையான நடவடிக்கைகள் மூலம் முன்னர் ஏற்பட்டுவிட்ட இழிவை — களங்கத்தை — பழியை— நாசத்தை முற்றும் ஒழித்து, நல்ல நெறியை, அறிவு பரப்பும் செம்மையான நடைமுறையை உருவாக்க வேண்டும் என்று நினைவுபடுத்திக் கேட்டுக்கொள்வது அறிவுலகக் கடமையாகும்.

நல்ல தமிழ்ப் புத்தகங்கள் எழுதுவோரும் வெளியிடு வோரும் நாளுக்கு நாள் நலிந்து, நம்பிக்கை இழந்து, ஏமாற்றமும் இதய நோக்காடும் கொண்டு இருக்கின்ற இருண்ட சூழ்நிலையில்,

தரம் தாழ்ந்த, முறைகேடுகளை வேகமாகப் பரப்பும் விறுவிறுப்பு மிகுந்த — இழிந்ததான கருத்துக் குப்பைகள் காட்சிக்குக் கவர்ச்சியாகத் தரப்படுவதும் அதனை வாங்கி, சிந்தை மயங்கி மக்கள் கீழ்நிலைக்குச் சரிவதும் ஆகிய

நிலைமை அறிவுலகத்தை மனம் நோகச்செய்து வருகிறது. எதிர்காலத் தமிழகம், அறிவு வளர்ச்சி குன்றிய வெறும் மனித விலங்குகளையே தாங்க வேண்டிய அவலம் தோன்றிவிட்டதை எண்ணிச் சிந்தனையாளர் மனம் நொந்து புலம்புகின்றனர்.

வாசகர் மனத்தில், புதுமையோ, புத்துணர்ச்சியோ, சிந்தனையோ அல்லது வாழ்க்கைப் பயனோ, நல்ல படிப்பினைகளோ புகுத்துகின்ற புத்தகங்கள் இன்று மக்களிடம் போய்ச் சேர முடிவதில்லை. அதற்குள்ள ஒரே வழி, அரசின் பொதுநூலகத்துறையே ஆகும். அந்த ஒரு வழியும், செயல்பட முனையாத — நூலக ஆர்வமற்ற அதிகாரிகளிடமே ஒப்படைக்கப்படுகிறது. 1500க்கு மேற் பட்ட கிளை நூலகங்களுடன் ஆயிரக்கணக்கானவர்கள் பணியாற்றும் ஒரு பெரிய துறைக்குப் பல மாதங்களாக இயக்குநரை நியமனம் செய்யாமல் வேறொருவர் பொறுப் பில் விடப்பட்டிருப்பது நூலகத் துறை தொடர்ந்து அலட்சியம் செய்யப்படுவதையே காட்டுகிறது.

நூல் படிக்கிறவர்களும் அறிஞர்களும் உள்ளூர மனம் நொந்து பழித்தவாறு உள்ளனர். அவர்கள் தலைநிமிர்ந்து தங்கள் மனச்சாட்சிக்கு மரியாதை தந்து, உரியவர்களிடம் தட்டிக் கேட்டு, தவறுகளைச் சுட்டிக் காட்டி, தமிழுக்கும் தமிழ் எழுத்துலகத்திற்கும் மரியாதை தேடித் தருவார் களா? அத்தகைய நற்காலம்—அறிவுஒளி மிக்க பொற் காலம் தமிழ்நாட்டில் தோன்றுமா?

அரசியல் ஆர்ப்பாட்டங்களே, அன்றாட சோற்றுப் பிரச்னைகளே நாட்டில் நிரந்தமாகிவிட்டன. அறிவு வளர்ச்சி பற்றிச் சிந்திக்க யாருக்கும் நினைவும் நேரமும் இருப்பதாகத் தெரியவில்லை! படித்தவர்கள் அனைவரும் சிந்திக்கும் மனிதர்களாகவும், சிறுமைகளைக் கண்டு, சினந்துச் சீறி' எழும் பட்டாளப் பொறுப்புணர்ச்சியுள்ள வர்களாகவும், சமுதாயப் பொதுவுணர்வும், முன்னேற்றக்

கருத்தும், செயல் ஊக்கம் கொண்டவர்களாகவும் தங்களைத் தாங்களே வெளிப்படுத்திக்கொள்ளவேண்டும். எல்லர்க்கும் எல்லாம் எனும் பொதுமை நோக்கு எல்லாரிடமும் தோன்றியாக வேண்டும். இத்தகைய உணர்வு அலைகள் எல்லாரையும் தாக்கியாக வேண்டும். காந்தியடிகளும் தமிழ் முனிவர் திரு. வி. க. அவர்களும் காட்டிய வாழ்வு நெறிகள் மறைய விடலாமா? உண்மைக்கும் உரிமைக்கும் போராட வேண்டாமா? பொது நலம் காக்கத் துணிவுடன் செயல்பட வேண்டாமா?

அல்லற்படும் அவல நிலையிலேதான் — புத்தகத் தொழிலின் அழிவினூடேதான்—ஆர்வத்தின் காரணமாக, வரலாற்றுக் கடமையாக — இந்த நூல் வெளியிடப் பெறுகின்றது.

வரலாற்றுப் பெருமையை உரைக்கும் இந்நூலை வெளியிடும் நேரத்தில், நிகழ்காலத் துன்பங்களை, தொல்லைகளை, இழிவுகளைக் குறித்துக் காட்டும் பொறுப்பும் என்னை ஆட்கொண்டு விட்டது. வரலாற்றின் வெள்ள வோட்டம் அதன் போக்கில் செல்கிறது. நானும் அதில் ஒரு துரும்பாக இழுத்துச் செல்லப்படுகின்றேன்.

எத்தனை இடர்ப்பாடுகள் இருந்தாலும், பாராட்டுவதற்கு அரசின் கல்வித் துறையும் தமிழ் வளர்ச்சித் துறையும் உள்பட எவரும் இல்லை என்ற நிலையிலும் இச் சிறு நூலை, 'ஏனோ தானோ' என்று அச்சிட்டு வெளியிட மனம் இசையவில்லை.

மாணவர்கட்கும் பொது மக்களுக்கும் வரலாற்று ஆய்வுகளின் விளக்கங்களோடு புதிய கண்டுபிடிப்பு பற்றிய செய்தியும் ஆய்வும் தருவதே முறைமை என்று எண்ணினேன். அதற்கேற்ப பல இடங்களிலிருந்தும் கண்டு எடுத்த ஆராய்ச்சிக்குரிய முற்கால முத்திரைப் படங்கள், எழுத்துகள் முதலியவற்றைத் தேடித் தொகுத்து, காட்சிக்கும் கருத்துக்கும் விருந்தாக அச்சிட்டுள்ளேன். பழமையான

கண்டுபிடிப்புகளுக்கும் அவற்றை ஆராய்ந்த ஆய்வாளர் கட்கும், அவற்றை அழகாக நூலுருவில் தந்த வெளி யீட்டாளர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை இங்கே நிறைவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாற்றை விளக்கும் அனைவரையும் வாழ்த்தி வணங்கிப் போற்றுவதே அறிவு வாழ்க்கையின் அடிப் படைக் கடமையாகும்.

தமிழ்நாட்டில் உள்ள வரலாற்றறிஞர்கட்கும் அறி வியல் அறிஞர்க்கும், சிந்தனையாளர் அனைவர்க்குமே நல்ல ஊக்கமும் உதவியும் ஒத்துழைப்பும் தந்து அவர் களைப் பெருமைபடுத்தி, அவர்கள் மூலம் உண்மையான உயர்வினை நம் நாடு தேடிப் பெற்றாக வேண்டும். இதுவே அறிவும், விழிப்பும், முன்னேறும் கருத்தும் உடைய ஒரு நல்ல சமுதாயத்தினரின் முதற் கடமை யாகும்.

இத்தகைய உணர்வுகளை வெளிப்படுத்த இச் சிறு வரலாற்று ஆய்வு நூல் களமாய் அமைந்துவிட்டது. இந் நூலாசிரியர் அவர்கட்கு என் அன்பும் நன்றியும் உரியது.

இந் நூல் உருவாகப் பலவகையிலும் துணை நின்ற பதிப்புத் தொழில்துறை சார்ந்த அனைவர்க்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,
வெள்ளையாம்பட்டு சுந்தரம்
சேகர் பதிப்பகம்

தமிழ்நாட்டில்
சிந்துவெளி
எழுத்தோவியம்









# சிந்துவெளிப் பகுதிகளில்
# கண்டுபிடித்த
# குறியீட்டு எழுத்துகள்

ஒரு சில...




64
65
66
66b
67
68
69
69b
70
71
72
73



சிந்துவெளியில் காணப்பெற்ற சில குறியீடுகள் பலுசிஸ்தானத்தில் இக் காலப் புழக்கத்தில் உள்ள மட்பாண்ட ஓடுகளில் காணப்படுகின்றன என்பது ஒரு முக்கியச் செய்தி. அவற்றிலுள்ள நெருங்கிய ஒப்புவமையை இப் படத்தில் காணலாம்.

இக் குறியீடுகளில் * மூன்று குறியீடுகள் கீழ்வாலையில் உள்ளவற்றோடு ஒத்திருப்பதைக் காணலாம்.

## இந்நூலாசிரியர்
## பி. எல். சாமி, ஐ. ஏ. எஸ்.
## அவர்களின் படைப்புகள்

*சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்*

1 சங்க இலக்கியத்தில் செடி, கொடி விளக்கம்
2 சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்
3 சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம்

*நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்*

4 தமிழகத்தில் தாய் தெய்வ வழிபாடு

*கம்பன் கழகம், புதுச்சேரி*

5 கம்பன் காவியத்தில் உயிரினங்கள்

*சேகர் பதிப்பகம்*

6 சங்க நூல்களில் மீன்கள்
7 சங்கநூல்களில் மணிகள்
8 Common names and myths of the flora and Fauna in Diravidian and Indo-Aryan Language
9 இலக்கியத்தில் அறிவியல்
10 சங்க நூல்களில் விந்தைப் பூச்சி
11 இலக்கிய ஆய்வு
12 தமிழ்நாட்டில் சிந்துவெளி எழுத்தோவியம்

*வானதி பதிப்பகம்*

13 தமிழ் இலக்கியத்தில் நாட்டார் பண்பாடு



பேரறிஞர்
ஈராஸ் அடிகளாரின்
மாணவராயிருந்து,

சிந்துவெளிக் குறியீட்டு
எழுத்துகளைப் படிப்பதற்கு

எல்லாக் குறிப்புகளையும்
தமிழில் கொடுத்த

எனது தமையனார்
திரு. பி. ஜோசப் அவர்கட்கு
இந்நூல் காணிக்கை.

வண்ண ஓவியங்கள் அமைந்த குன்றின் தோற்றம்.
கீழ்வாலை.





கீழ்வாலைக் குன்றில் உள்ள
செவ்வண்ண ஓவியங்களின் தொகுப்பு.
எழுத்துகளையும் காணலாம்.

கீழ்வாலையில்
மற்றொரு உயர்ந்த குன்றிலுள்ள பெரிய ஓவியங்கள்.



## தமிழகத்தில் புத்தொளி

அண்மையில் (1982) தமிழ் நாட்டில் தென்னார்க்காடு மாவட்டத்தில் விழுப்புரத்திற்கு அருகில் வரலாற்றுக்கு முற்பட்ட ஓவியங்கள், புதுவை வரலாற்றுக் கழகத்தாரால் கண்டு பிடிக்கப்பட்டன. இந்த ஓவியங்களின் அடிப்பகுதியில் சிந்துவெளி நாகரிக முத்திரைக் குறியீட்டு எழுத்துகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்தக் குறியீடுகளைப் பற்றி அறியும் முன், இதுவரை சிந்துவெளி நாகரிகம் எவருடைய நாகரிகம் என்பதைப் பற்றி அறிஞர்கள் பலர் கூறியுள்ள கருத்துகளைக் காணலாம்.

அரப்பா எழுத்துகள், பிராமி எழுத்துடன் தொடர்புடைய எழுத்துகளென்று சிலர் கூறினர். ஈஸ்டர் தீவுகளின் எழுத்துகள் என்று சிலர் எடுத்துரைத்தனர். இட்டைட்டுகளின் எழுத்துகள் என்று ஒருசிலர் முடிவு கொண்டனர்; எட்ருஸ்கன் எழுத்துகள் என்று சிலர் கருதினர்.

ஆனால், அறிஞர் ஈராஸ் அடிகளார் இந்த எழுத்துகள் பழந் திராவிட எழுத்துகள் (Proto-Dravidian) என்று கருதினர்.

குஜராத்து மாநிலத்தில் லோத்தால் என்ற விடத்தில் அகழ்வராய்ச்சி செய்த எஸ்.ஆர். ராவ் அவர்கள் சிந்துவெளி எழுத்துகள் இருக்கு வேத காலத்தை ஒட்டிய ஆரியநாகரிகம் என்று கூறினார். இந்தக் கருத்தைச் சிந்துவெளிக் குறியீடுகளை, கணிப்பொறி (Computer) வழியாக ஆராய்ந்த அறிஞர் ஐ. மகாதேவன் மறுத்திருக்கிறார்.

அஸ்கோ பர்போலா (Asko Purpola) என்ற பின்லாந்து நாட்டு அறிஞரும், நார்சோ (Knorsov) என்ற உருசிய நாட்டு அறிஞரும் கணிப்பொறி வழியாக ஆராய்ந்து, சிந்துவெளிக் குறியீடுகள் பழந் திராவிடச் சார்பு உடையன என்று தெளிவாக எழுதியுள்ளனர்.

வரலாற்றுக்கு முந்தைய நாகரிகங்களை ஆராய்ந்த மிகச் சிறந்த அறிஞரான எச்.டி. சங்காலியா பலரது ஆராய்ச்சிகளையும் கருத்துகளையும் ஆராய்ந்து, 'ஈராஸ் அடிகள் கூறிய கருத்தே மிகப் பொருத்தமாயுள்ளது' என்று அவர் எழுதியுள்ள 'இந்திய வரலாறும் தொல்பொருளும் சில கூறுகள்' (Aspects of Indian History and Archeology) என்ற நூலில் கூறியிருக்கின்றார். அவர்கள் கருத்து:

சிந்துவெளி எழுத்துகள் பிராமி அல்லது ஈஸ்டர் தீவு இட்டைட்டு எட்ருஸ்கன் ஆகியவற்றுடன் தொடர்புடையன என்று லாங்டன், வேடல்,



பிரான்நாத், ஈவிசி போன்றோர் கருதுகின்றனர். ஈராஸ் பாதிரியார் மட்டுமே தொல்பழந் திரா விடம் என்று கருதுகின்றார். இதனை விரிவாகவும் விளக்கமாகவும் ஹன்ட்டர், சார்டன் ரோஸ் மற்றும் பலர் ஆய்ந்துள்ளனர்.

இதனை இருமொழிக் கல்வெட்டுகளின் விளக் கங்கட்குப் பிறகுதான் முடிவு செய்யமுடியும். ஈராசின் கருத்துகள் (ஊகம்) முறையான ஆய் வாக இருப்பதைக் காணலாம். கிரேடன், மெசப டோமியன் ஆகிய நாகரிகங்கட்கு இணையாக சிந்துவெளியுடன் ஒத்திருக்கின்றன.

இந்தியப் பண்பாட்டில் சிந்துவெளி எழுத்து கள் பற்றி பல்வேறு கருத்துகள், அறியாமையால் ஏற்பட்டுள்ளன.

எழுத்துகளைக் கண்டுபிடித்த ஜான் மார்ஷ லும் மற்றவர்களும் வேத கால நாகரிகத்தோடு தொடர்பற்றதென்றும் ஆரியர் அல்லாதவர்க் குரிய தென்றும் கருதுகின்றனர். அறிஞர் கீத் அவர்களும் மற்றவர்களும் இதனை ஏற்கின்றனர்.

மேலும் அறிஞர் சரூபும் வேறு சிலரும் இருக்கு வேதத்துடன் சிந்துவெளி எழுத்துகளுக் குத் தொடர்புண்டு என்கின்றனர்.

ஆரியரும் ஆரியர் அல்லாதாரும் கலந்த கலப்பு நாகரிகம் என்பார் திரு சந்தா.



குறியீடுகளைக் கொண்டு ஈராஸ் அடிகள் விளக்குகையில் அதனைத் தொல்பழந் திராவிடம் என்கின்றார்.

சுமேரிய — எகிப்திய நாகரிகம் சார்ந்தது என்கிறனர் பிரான்நாத், கார்டன் ஆகியோர்.

'துளையிட்ட பழைய நாணயங்கள், சுடு பானைகள், உருவமுத்திரைகள் முதலியவற்றைக் கொண்டு, கற்றறிந்த அறிஞர் பலர் செய்த ஆராய்ச்சியில் மெசபடோமியா, எகிப்தியன், கிரேட்டன் மற்றும் நடுநிலக் கடலக நாடுகளின் பண்பாட்டுக் கூறுகள் உள்ளன' என்று எழுதி யுள்ளார்.

(The Indus script has been thought to be related to the Brahmi or to the Easter Islands or to the Hittite, Etruscan or supposed to be Prote-Dravidian by Langdon, Waddell and pran Nath and Hevesy, Hrozney, Piccoli, and Heras respecti vely. It is exhaustively and objectively examined and classified by Hunter and to some extent by Sarton, Ross and others. Which of these interpretations is correct will be decided only by a bilingual inscription. Heras hypothesis seems to be the most methodical approach to the subject which is also supported by the correlation of the Cretan, Mesopotamian and Indus finds.

Ignorance of the Indus language has caused wide divergence of opinion as to the character of its culture as its place in Indian culture. Its discoverers—Marshall and others—thought it to be non-Aryan, having no relation with the Vedic civilization. This view was supported by

keith and others. Sarup and a few others think it to be Rigvedic; Chanda a mixture non-Aryan and Aryan; while Heras, from his interpretation of the seals, proto-Dravidian, and pran Nath, Sumero-Egyptian.

A Purely objective study of some items of its material culture has has led scholars to trace their affinity with Mesopotamian, Egyptian, Cretan and other Meditterranean Cultures, while their survivals have also been noticed in punch-marked coins, terracottas, images, etc., by Pran Nath, Gordon, Das gupta, Heras and Aravamuthan.)

அண்மையில் சென்னை நகரில் வந்து பேசிய பின்லந்து நாட்டு அறிஞரான அஸ்கோ பர்போலா அவர்கள், சிந்துவெளி நாகரிகத்தில் கிடைத்த பொருள்களையும் சிற்பங்களையும் ஒப்பிட்டுப் பார்த்து, எலமைட் நாகரிகத்தினை மிகவும் ஒத்திருப்பதைக் கூறி, 'சிந்துவெளி நாகரிகம் ஆரியருடையது இல்லை' என்று உறுதிப்படுத்தினார்.

அண்மையில் 'இண்டிகா' என்ற இதழில் (செப்டம்பர் 1982) ஈராஸ் அடிகளும் இண்டஸ் எழுத்துகளும்' என்னும் தலைப்பில் டாக்டர் எச். டி. சங்காலியா என்ற பேரறிஞர் ஓர் அரிய கட்டுரை எழுதியுள்ளார்.

பின்லந்து நாட்டு அறிஞர்கள், உருசிய நாட்டு அறிஞர்கள், எஸ். ஆர். இராவ் ஆகியோர் செய்த ஆராய்ச்சிகளைக் கொண்டு சில கருத்து களை அறிஞர் சங்காலியா அக் கட்டுரையில் கூறி யுள்ளார்.

உருசியாவில் அலெக்ஷி, கொன்றாட்டா, நார்சோ ஆகியோர் அண்மையில் கணிப்பொறி வழியாக ஆராய்ந்துள்ளதையும் அவர் அக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர், சிந்துவெளி எழுத்துகள், இலக்கண அமைப்புப்படி பழந் திராவிட மொழியாக இருக்கலாம் என்பதை நார்சோ கூறியுள்ளதையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

திரு. எஸ். ஆர். இராவ் கருத்துக்கு எதிராக அவர் நார்சோ, அஸ்கோ பர்போலா, அமெரிக்க அறிஞர் Fபேர் சர்வீஸ் ஆகியோர் கருத்துகளை எடுத்துக் காட்டி உள்ளார்.

டாக்டர் சங்காலியா அவர்கள் வால்டர் Fபேர் சர்வீஸ் எனும் அறிஞர் சிந்துவெளிக் குறியீடுகளை விரிவாக ஆராய்ந்துள்ளதைப் பற்றித் தமது ஆய்வுக் கட்டுரையில் விளக்கியுள்ளார். அவர் கராச்சிக்கு அருகில் சிந்துவெளி முத்திரைகள் போன்றவற்றைக் கண்டுபிடித்ததைப் பற்றியும் கூறியுள்ளார்.

சிந்துவெளி முத்திரைகளில் காணும் குறியீடுகளை மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், தென்னிந்தியாவில் கண்ட சில செப்புக்காலக்



குறிகளுடன் (Chalcolithic sign) ஒப்பிட்டு, அறிஞர் ஈராஸ் அடிகளின் முறையைப் பின்பற்றி, பழந் திராவிடக் குறியீடுகள் என்று திரு Fபேர் சர்வீஸ் கூறியுள்ளார்.

ஈராஸ் அடிகள் சிந்துவெளி நாகரிகத்தை ஆராய்ந்து எழுதியபொழுது பர்ரோ, எமனோ என்ற அறிஞர்கள் எழுதிய திராவிட வேர்ச் சொல் அகராதி (Etymological dictionary of Dravidian languages) இருந்ததில்லை.

மற்றும், செப்புக் கால நாகரிகம் வட இந்தியா, தக்காணம், தமிழ்நாடு வரை பரவி யிருந்ததை — ஈராஸ் அடிகள் இருக்கும்போது கண்டுபிடிக்கப்படவில்லை. ஈராஸ் அடிகளுக்கு இந்த வசதிகள் அப்பொழுது இருந்ததில்லை. அப்படி இருந்தும் 'சிந்துவெளிக் குறியீடுகள்' பழந் திராவிட நாகரிகம் என்று அவர் கண்டு பிடித்ததைக் குறிப்பிட்டுள்ளார்.

சங்காலியா அவர்கள் இந்த இடத்தில் சிந்து வெளிக் குறியீடுகள் பற்றி நான் அனுப்பிய கீழ்வாலை ஓவியத்தைக் குறிப்பாகக் குறிப்பிட் டுள்ளார்.



மேலும் அவர், Fபேர் சர்வீஸ் அவர்கள் 175 படக் குறியீடுகளை ஆராய்ந்ததைச் சிறப்பான தாகக் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்.

பேரறிஞர் சங்காலியா அவர்கள் சிந்துவெளி எழுத்துகளைப் பற்றி ஈராஸ் அடிகள் கருத்தே பொருத்தமானது என்று கூறியிருப்பதை எவரும் எளிதில் ஒதுக்கிவிட முடியாது.

நான், பேரறிஞர் சங்காலியா அவர்களுக்குக் கீழ்வாலை ஓவியத்தை அனுப்பியபொழுது, 'அதிலுள்ள குறியீடுகள் சில சிந்துவெளி நாகரிகத்தின் குறியீடுகள்போல் உள்ளன'வென்று அவர் எனக்கு எழுதியுள்ளார்.

அறிஞர் எஸ். ஆர். இராவுக்கு நான் ஒளிப் படம் அனுப்பிய பொழுது, சிந்துவெளிக் குறியீடுகள் போல் சில இருக்கின்றன என்றும், ஆனால் இதனை உறுதி செய்ய வேறு சில சித்திர ஓவியங்கள் வேண்டுமென்றும் கூறினார்.

ஆனால், குஜராத்தில் லோத்தாலிலிருந்து தென்னிந்தியா வரை காணப்பட்ட இந்தக் குறியீடுகள் எப்படிக் கீழ்வாலையில் காணப்பட்டன என்பதற்கு, திரு எஸ். ஆர். இராவ் விளக்கம் கூறவில்லை.

அண்மையில் சிந்துவெளி நாகரிகத்தைப் பற்றி அஸ்கோ பர்போலா என்ற பின்லந்து நாட்டு அறிஞர் சென்னை 'சி. பி. ராமசாமி ஐயர் பவுண்டேஷ'னில் உரை நிகழ்த்தியபொழுது (டிசம்பர் 82)இந்தக் கீழ்வாலை ஓவியம் அவரிடம் காட்டப்பட்டது.

சிந்துவெளிக் குறியீடுகள் மிக முன்னரே மறைந்துவிட்டன. இந்தப் புகைப் படத்தில்

காணப்படும் குறியீடுகள் மறையாது எஞ்சியதாக இருக்கலாமென்று கூறினார். இதைப் பற்றி மேலும் அறிய வேண்டுமென்றும் அவர் கூறினார்.

இதுவரை கூறியவற்றிலிருந்து கீழ்வாலை ஓவியத்தில் காணப்படும் குறியீடுகள் சிந்துவெளிக் குறியீடுகளுடன் ஒத்திருப்பதை எல்லோரும் ஒப்புக் கொண்டு உள்ளனர். இதை ஒட்டிச் சிறப்பாக ஆராய்ச்சி அறிஞர் சங்காலியா அவர்கள் ஒரு கருத்தைக் கூறியுள்ளார்:

"வரலாற்றுக்கு முற்பட்ட ஓவியங்களின் காலத்தை நிர்ணயிக்க,

காலத்தைக் கணிக்கக்கூடிய பொருள்கள் அருகில் இருந்தால்தான் கண்டுபிடிக்க முடியும்."

## காணப்பட்ட இடங்கள்

வரலாற்றுக்கு முற்பட்ட ஓவியங்கள் இந்தியாவில் முதலில் மத்தியப் பிரதேசத்தில் பிம்பட்கா (Bimbetka) என்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்டன. பின்னர் மத்தியப்பிரதேசத்தி லேயே இது போன்ற ஓவியங்கள் பல கண்டு பிடிக்கப்பட்டன.

அதன் பிறகு ஆந்திர மாநிலத்தில், கடப்பா மாவட்டத்தில் ஓர் ஊரிலும் வரலாற்றுக்கு முற்பட்ட ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

தமிழ்நாட்டில் ஆனைமலைக்கு அருகிலுள்ள மறையூரிலும்,

தருமபுரி மாவட்டத்திலுள்ள மலைப்பட்டி என்னும் இடத்திலும்,

தென்னார்க்காடு மாவட்டத்தில் திருக்கோயி லூர் பக்கத்திலும் கண்டுபிடிக்கப் பெற்றன,

கீழ்வாலையில் நாங்கள் ஓவியங்களையும் எழுத்துக்களையும் கண்டுபிடித்த பிறகு, அப் பகுதியின் சுற்றுப்புறங்களில், அவ்வூருக்கு அண்மையிலேயே,

செத்தவரை

குளிர்சுனை

புறாக்கல்

ஆகிய ஊர்ப் பகுதிகளிலும் வரலாற்றுக்கு முற்பட்ட ஓவியங்கள் பல கண்டுபிடிக்கப் பெற்றுள்ளன.

மேலும் கோயமுத்தூருக்கு சுமார் 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வேட்டைக்காரன் மலையிலும் இத்தகைய பழைமையான ஓவியங்கள் காணப்பெற்றன. இந்த ஓவியங்களைப் பற்றித் திரு. என். எஸ். இராமசாமி என்ற அறிஞர் "தி வீக்லி" ("The weekly") என்னும் (17.4.83) இதழில் விவரமாக எழுதியுள்ளார்.

ஆனால், இந்த மேற்குறிப்பிட்ட இடங்களில் எவற்றிலும் ஓவியங்களுடன் சிந்துவெளி எழுத்துகள் காணப்படவில்லை.

**தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் கருத்துகள்**

1982-ஆம் ஆண்டின் முற்பகுதியில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சிந்துவெளி



நாகரிகம் பற்றிய கருத்தரங்கு ஒன்று நடை பெற்றது. அக் கருத்தரங்கில் துணைவேந்தர் டாக்டர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் கூறியுள்ள கருத்துகளையும் இங்குக் கவனிக்க வேண்டும்.

1944-இல் ஈராஸ் அடிகள், மதுரைத் தொழி லதிபர் கருமுத்து தியாகராயச் செட்டியார் அவர்கள் கொடுத்த பண உதவியுடன், மொகஞ்ச தாரோ எழுத்துகளைப் படித்துக் காட்டி, நூல் வெளியிட்டார் என்ற ஒரு முக்கியமான செய்தி யைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சிந்துவெளி நாகரிகத்தைப் பற்றிக் கவனிக்கும் பொழுது அரப்பாவுக்கு அருகிலுள்ள பிராகுயி (Brahui) என்ற திராவிடமொழி வழங்கி வருவதைக் கவனிக்க வேண்டுமென்று குறிப்பிட் டிருக்கிறார்.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்குப் பிறகு தொடங்கப்பெற்ற "தமிழ்ப் பண்பாடு" (Tamil Culture) என்ற இதழைத் தனிநாயகம் அடிகள் தொடங்கியதையும், சிந்துவெளி நாக ரிகத்தைப் பற்றி அதில் வந்த ஆராய்ச்சிகள், கட்டுரைகள் பற்றி யெல்லாம் துணைவேந்தர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட் டுள்ளார்.



என் தமையனார் பி. ஜோசப், ஈராஸ் அடிகளுக்கு ஆராய்ச்சிப் பணி புரிந்து உதவியதை யும், மற்றும் என் தமையனார் சிந்துவெளி நாகரிகத்தைப் பற்றி எழுதிய கட்டுரைகளையும், துணைவேந்தர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். ஐ. மகாதேவன் அவர்கள் எழுதிய நீண்ட கட்டுரைகளைப் பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் ஜப்பானிய அறிஞ ரான **கராசீமா** அவர்கள், சில மட்பாண்ட ஓடுகள் சிந்துவெளிநாகரிகத்தில் காணப்படும் ஓடுகளுடன் ஒப்பிட்டு ஆராய்ந்திருப்பதையும் தமிழ்ப் பல் கலைக் கழகத் துணைவேந்தர் குறிப்பிட் டுள்ளார்.

நானும் புதுவை வரலாற்றுச் சங்கத்தாரும் கீழ்வாலையில் கண்டுபிடித்த வண்ண ஓவியத்தி லுள்ள எழுத்துகள், மறைந்து போன ஒரு நாகரிகத்தின் எழுத்துகளில் ஓர் இணைப்பாக இருப்பதையும் அவர் எடுத்துக் காட்டியுள்ளார்.

இது சார்பாக அவர் கூறியுள்ள இன்னொரு கருத்தையும் நாம் கவனிக்க வேண்டும்.

எகிப்திய ஓவிய எழுத்துகளை **ரோசட்டா** முத்திரையை வைத்து ஆராய்ந்து கொண் டிருந்த பொழுது, **சாம்பில்லியன்** என்ற 11 வயது சிறுவன் ஆறு கீழை நாட்டு மொழிகளையும், இத்தாலிய, கிரேக்க மொழிகளையும் நன்கு படித்திருந்ததையும் அந்தச் சிறுவனுக்கு எகிப்திய பட எழுத்துகளைக் காட்டிய பொழுது அதை ஓரளவு சரியாகப் புரிந்து படித்துக் காட்டியதை யும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதைப் பற்றி ஆராய்ந்த தாமஸ் எங் என்ற அறிஞர் பல காலம் ஆராய்ந்து கண்டுபிடித்த தமது ஆராய்ச்சி முடிவுடன் இச் சிறுவனுடைய நுண்ணிய ஊகம் ஒத்து இருப்பதைக் கண்டு வியப்புற்றார் என்பதையும் கூறியுள்ளார்.

இந்தச் சிறுவன் தனி உணர்வுடைய ஊகத்தோடு (Intution) எகிப்திய ஓவிய எழுத்துகளைப் படித்ததையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈராஸ் அடிகள் அவ்வாறே உள்ளுணர்வு ஊகத்தால் கண்டுபிடித்ததையும் துணைவேந்தர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

சிந்துவெளி நாகரிகத்தை ஒட்டியுள்ள நாகரிகம், எலமைட் நாகரிகத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ள பொருள்களுடன் சிந்துவெளியில் கிடைத்த பொருள்கள் மிகவும் ஒத்திருப்பதை அஸ்கோ பர்போலா என்னும் அறிஞர் சுட்டிக் காட்டியுள்ளார்.

**கீழ்வாலை — ஒப்பீடு**

கீழ்வாலையில் 80 வரைபடங்கள் காணப்படுகின்றன. கீழ்வாலையில் காணப்படும் ஓவியத்தில் 5 குறியீடுகள் ஒரே வரியிலுள்ளன.



இந்தக் குறியீடுகள் சிந்துவெளி நாகரிக முத்திரைகளில் காணப்படுகின்றன.

இந்தக் குறியீடுகளை ஆராய்ந்தபொழுது, இதில் வரும் முதல் குறியீடு,



சிந்துவெளி நாகரிகத்தில் காணப்படும் ஒரு கூட்டுக் குறியீட்டில் காணப்படுகிறது.



இது போன்ற குறியீடு 3 குறுக்கு வரிகளுடன் போனிசியன் எழுத்துகளில் காணப்படுகின்றது.

இது ஈராஸ் அடிகளின் நூலில் காட்டப் பட்டுள்ள அரப்பா குறியீடுகளான 12, 54, 65, 69, 87, 400, 417 முதலிய சிந்துவெளி முத்திரைகளில் (marshall)கூட்டெழுத்துகளில் காணப்படுகின்றன.



இந்தக் குறியீடு இரண்டாவது குறியீடு. இதுவே நான்காவது குறியீட்டில் தலை கீழாகக் காணப்படுகின்றது.

இந்தக் குறியீடும் சிந்துவெளி முத்திரையில் காணப்படுகிறது. ஆனால், கீழ்வாலையில் காணப் படுவது போன்று சாய்வாகக் காணப்படவில்லை.



இந்தக் குறியீடு சுமேரிய முத்திரைகளிலும் காணப்படுகிறது.

இது பலுசிஸ்தானத்தில் இன்று செய்யும் மட்பாண்டங்களில் காணப்படுகின்றது.

இந்த மட்பாண்டக் குறியீடுகளுடன் பண்டைய சிந்துவெளிக் குறியீடுகள் எப்படி ஒத்துள்ளன என்பதை ஒரு படத்தில் (பக் 46) காட்டியுள்ளேன்.

இது சார்பாக தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்கள் என்னிடம் கூறிய கருத்தையும் கூற விரும்புகின்றேன்.

பஞ்சாப் முதலிய மாநிலங்களில், தாழ்ந்த மக்களது வீடுகளின் சுவர்களில் உள்ள மண் ஓவியங்களில் சிந்துவெளிக் குறியீடுகள் காணப் படுவதைத் துணைவேந்தர் குறிப்பிட்டுள்ளார்.

பஞ்சாப் மாநில மாட்டுச் சந்தைகளில் சிந்து வெளி நாகரிக முத்திரைகளில் காணப்படும் நான்கு கால்களுடைய மாட்டு உணவுத் தொட்டிகளை இன்றும் பயன்படுத்துவதை நான் நேரில் கண்டேன். இத்தகைய தொட்டிகள் பிற மாநிலங்களில் பயன்படுவதாகத் தெரியவில்லை.

M எழுத்துப் போன்ற மூன்றாவது குறியீடு M. D. No. 14 (Marshall) சிந்துவெளியில் கூட்டு



முத்திரையில் காணப்படுகின்றது. இதை ஈராஸ் அடிகளார் ஒரு மலையின் குறியீடு என்று கருது கின்றார்.

இது கடைசிக் குறியீடு :



இதுபோன்ற குறியீடுகள் M. D. No. 10, M. D. No 48 குறியீடுகளாக அரப்பா முத்திரைகளில் காணப்படுகின்றன.

அரப்பா முத்திரைகளில் ஒரு வட்டத்திற்குள் ஆறு கோடுகளாகக் காணப்படும்பொழுது, கீழ் வாலை ஓவியத்தில் நான்கு கோடுகள் காணப் படுகின்றன.

அரப்பா முத்திரைகளில் 8 குறுக்குக் கோடு களுடன் இக் குறியீடு காணப்படுகின்றது.

கீழ்வாலையில் காணப்பட்டதைப் போன்ற இந்தக் குறியீடு அரப்பா முத்திரையில் கடைசி யில் காணப்படுகின்றது.

D என்ற எழுத்துப் போன்ற குறியீடு ஒரு படகுக்காரரின் கையில் குறுக்குக் கோடுகளுடன் காணப்படுகின்றது.

ஆனால், சிந்துவெளி நாகரிகத்தில் இந்த D போன்ற குறியீடுகள் காணப்படுகின்றன; இருப் பினும் மற்றொரு குறியீட்டுடன் கூட்டாகக் காணப்படுகின்றன.

ஈராஸ் அடிகள் எழுதிய (Studies in Proto Indu Mediterranean culture) நூலில் காணப்படும் ஒரு தெய்வத்தின் தலை அலங்காரம் கீழ்வாலை

யில் காணப்படும் தெய்வத்தின் தலை அலங்கா ரத்திலிருந்து சிறிது வேறுபடுகின்றது.

கீழ்வாலையில் ஓவியத்தின் அடியில் காணப் படும் 5 குறியீடுகள் மற்ற ஓவியங்களிலும் காணப் படுவதால், அது ஓவியத்தை எழுதியவருடைய பெயராக இருக்கலாம்.

கீழ்வாலை ஓவியத்தில் 17 குறுக்குக் கோடுகளுடன் ஒரு சூரியன் உருவம் காணப் படுகின்றது.



ஒரு மனிதன் அச் சூரியனை வணங்குவது போல் காணப்படுகின்றது.



இவ்வாறான குறியீடு சிந்துவெளிக் கால நாகரிகத்தில் காணப்படவில்லை.



இந்த ஓவியத்தில், ஒரு படகில் பறவையின் அலகுகளைப் போன்ற முகத்துடன் நான்கு பேர் நின்று கொண்டிருப்பது காணப்படுகிறது.

இவ்வாறான படகு எகிப்திய ஓவியங்களில் காணப்படுவது போன்றது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

நான்கு மனிதர்களுக்கு முன்னால் உள்ள ஒரு குறியீடு, படகு செல்லும் திசையைக் காட்டு கின்றது.



வல்லூறு மூக்குப் போன்ற கடவுள்களின் — ஓரஸ் (Horus), ஒசிரிஸ் (Osiris) — உருவங்கள் எகிப்தியக் கோவில்களில் காணப்படுகின்றன.

சூரியனுக்கு மேலுள்ள ஒரு பெண் தேவதை அருகேயுள்ள உருவம் ஈராஸ் அடிகளின் நூலில் மொகஞ்சதாரோவில் காணப்படும் 201 ஆவது உருவத்துடன் ஒப்பிட்டுக் காணத்தக்கது. இந்த உருவத்தை ஈராஸ் அடிகள் எகிப்திய உருவமாகக் கருதுகிறார்.

சூரியனின் குறியீடு (உருவம், 230) ஈராஸ் அடிகள் எழுதிய நூலில் எகிப்திய ஓவியத்தில் ரா என்ற சூரியன் உருவமாகவும் வல்லூறின் தலை யுடைய உருவமாகவும் உள்ளது.

ஒவ்வொரு நாளும் ஒரு படகில் வானத் திற்குப் பயணம் செய்வதாகவும் கூறப்படுகின்றது என்பதை ஈராஸ் அடிகள் சுட்டிக் காட்டி யுள்ளார்.

கீழ்வாலையில், மனிதன் ஒருவன் நீண்ட துடுப்புடன் படகில் பயணம் செய்வதாகக் காணப் படுகின்றது. இந்த ஓவியம் எகிப்திய நாகரி கத்தை ஒத்திருப்பதாகத் தோற்றமளிக்கிறது.

### மூன்று பகுதிகள்

கீழ்வாலை ஓவியத்தில் மூன்று பகுதிகள் காணப்படுகின்றன.

முதல் பகுதியில், ஒரு மனிதன் குதிரை யில் ஏறிச் செல்வது போலவும், ஒரு பெண் தெய்வம் அழைத்துச் செல்வது போலவும் காணப்படுகிறது.



பெண் தெய்வம் குதிரைமேல் இருப்ப வனை, தாய்த்தெய்வத்திற்குப் பலியிடுவதற் காகக் கூட்டிச் செல்வதாக இதனைக் கருத லாம்.

இக் காலத்தில் கீழ்வாலைக் கிராம மக்கள் இந்த ஓவியங்களுள்ள பாறையை ''இரத்தக் குடைக்கல்'' என்று கூறுகின்றார்கள். அதன் அருகில் செல்வதற்கே மக்கள் பயப்படு கின்றார்கள். ஓவியங்கள் மனித இரத்தத் தில் எழுதப்பட்டதாகவும் அங்குள்ள மக்கள் கருதுகின்றார்கள்.

ஆனால், இந்த ஓவியங்கள் ஒருவகைச் செம்மண்ணால் (Ochre) எழுதப்பட்டதை அம் மக்கள் புரிந்து கொள்ளவில்லை.

இரண்டாவது பகுதியில் காணப்படும் உருவமான "தாய்த் தெய்வம்" விசித்திர மான தலை அலங்காரத்துடன் காணப்படு கின்றது. அதற்குக் கீழே சூரியன் உருவம் காணப்படுகின்றது.



ஒரு மனிதன் அந்தத் தாய்த் தெய்வத் தைத் தொழுவதாகவும் காணப்படுகின்றது.

இந்த ஓவியத்திலிருந்து இந்த மனிதன் தாய்த் தெய்வத்திற்குப் பகலில் பலியிடப் படுவதாகத் தெரிகின்றது.

மூன்றாவது பகுதியில் காணப்படும் படகில்செல்லும் நான்கு மனிதர்கள் பலியிடப் பட்ட மனிதர்களாகவும், அவர்கள் மோட் சத்திற்குப் படகில் செல்வதாகவும் கருத வேண்டியிருக்கிறது.



முன்பக்கங்களில் கூறிய உருவங்களையும்
வேறு இரு மனித ஓவியங்களையும்
இங்கே ஒருசேரக் காணலாம்.

ஆய்வுகள்

டாக்டர் பி. பி. லால் அவர்கள், பெருங்கற்கால நாகரிகம், மண் பாத்திரங்களில் அரப்பா நாகரிகத்தால் காணப்படும் குறிகளை (signs) கோதாவரி ஆறு வரை சென்று ஆய்ந்து கண்டு பிடித்தார். அவற்றில் 80 சதவிகிதம் சிந்து வெளி நாகரிகத்தில் காணப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

ஆனால், அவை சிந்துவெளி நாகரிகத்தின் குறியீட்டு எழுத்துகளாக இல்லை.

வரலாற்றறிஞர் மார்டிமர் வீலர் அவர்கள், பெருங்கற்கால நாகரிகம் கி. மு. மூன்றாம் நூற்றாண்டுவரை என்று கண்டுபிடித்தார்.

ஆனால், இக் காலத்தில் கண்ட ஆராய்ச்சி முடிவின்படி இந்த நாகரிகம் கி. மு. ஆயிரம் ஆண்டுகள் வரை இருந்திருக்கலாம்.

புதுக் கற்கால நாகரிகத்தின் முடிவில் செம்புக் கால நாகரிகம் தொடங்கியிருக்கலாம்.

கார்பன் — 14 என்னும் ஆராய்ச்சி முறையில் ஹல்லூர் (Hallur) என்ற இடத்தில் புதிய கற்கால நாகரிகம், செம்புக் கற்கால நாகரிகம் ஆகியவற்றுடன் பெருங்கற்கால (Magalithic) நாகரிகம் கி. மு. 1105—935 என்று கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றது.

சுப்பாராவ் என்ற அறிஞர், திராவிடர்கள் இராஜஸ்தான் பகுதியிலிருந்து நடு இந்தியா வழியாக கி. மு. 5C0 வாக்கில் வந்தனர் என்று கூறியிருக்கின்றார்.

அவர், பெருங்கற்கால நாகரிகம் திராவிடர் களுடையது என்கிறார்.

மேலும் அவர், கருப்பு சிவப்பு மட்பாண்ட ஓடுகள் இரும்பு வருவதற்கு முற்பட்டது என்கிறார்; பெருங்கற்கால நாகரிக மக்கள் கடல் வழியாகத் தென் இந்தியாவுக்கு வந்திருப்பதாகக் கருதுகின்றார்.

குரு ராஜ ராவ் என்பவர் கருப்பு சிவப்பு மட்பாண்ட ஓடுகள் திராவிடருடையவை என்றும், அவை கத்தியவாரில் கடைசிக்கால அரப்பா நாகரிகத்துடன் காணப்படுவதாகவும் கூறினர். அங்கிருந்து அம் மக்கள் தென்புறமாகப் பரவிய தாகவும் அவர் கூறியுள்ளார்.

பெருங்கற்கால நாகரிகம், ஹல்லூர் அகழ் வாய்வின்படி கி. மு. 1050 என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. அங்கு இரும்புப் பொருள்கள் சிலவும் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளன. ஆதலின் இரும்பு, குதிரை ஆகியவற்றைக் கொண்டு காலத்தைக் கணித்தல் பொருத்தமல்ல என்பது தெரிகின்றது.

தமிழ் நாட்டில் ஓரிடத்தில் மட்டும் பாறை ஓவியத்துடன் கல்வெட்டு எழுத்துகள் காணப் பட்டுள்ளன. ஆனால் சிந்துவெளி எழுத்துகளைப் போன்றவை அல்ல. அக் கல்வெட்டு எழுத்துகள் பிராமி வகையைச் சார்ந்தவையாகும்.

ஆதலின் பெருங்கற்கால நாகரிகம் குறைந்தது கி.மு. முதல் ஆயிரமாண்டுகள் வரை இருந்திருக் கலாம்.

சாம்பல் நிற ஓடுகள் (Grey ware) குதிரை உருவத்துடன் கி. மு. 1200 ஆண்டுவரை கண்டு பிடிக்கப்பட்டு உள்ளன.

தென்னிந்திய பெருங் கற்கால நாகரிகத்தில் காணப்படும் கருப்பு-சிவப்பு மண்பாத்திர ஓடுகள் அரப்பாவில் காணப்பட்டன. கீழ்வாலையிலும் இந்த ஓடுகள் காணப்பட்டன.

பெருங் கற்கால நாகரிகத்து ஓடுகளிலும் சிந்துவெளி நாகரிகத்தில் காணப்பட்ட சில குறிகள் (sings) காணப்படுகின்றன.

பேராசிரியர் மகாலிங்கம் அவர்களும் பழங் காசுகளில்கூட சிந்துவெளி நாகரிகக் குறிகள் காணப்படுவதைக் குறிப்பிட்டுள்ளார்.

புதுக் கற்கால நாகரிகத்திலும், செம்புக் கற்கால நாகரிகத்திலும், பெருங்கற்கால நாகரிகத் திலும், எழுத்துகள் இருந்ததில்லை என்று அறிஞர் பலர் கருதுகின்றார்கள்.

ஆனால், அசோகன் காலத்தில் காணப்படும் எழுத்துகள் பற்றிக் கவனிக்க வேண்டும். அந்த எழுத்துகள் திடீரென்று தோன்றி இருக்க முடியாது அல்லவா?

எழுத்துகள் புதுக் கற்காலம், செப்புக் காலத் திலேயே தோன்றி இருக்கலாம். அவை சிந்துவெளி நாகரிக எழுத்துகளுடன் தொடர் புடையனவாக இருந்திருக்கலாம். இதன் தொடர் பினையே கீழ்வாலை ஓவியங்களில் காணப்படும் குறியீடுகள் காட்டுகின்றன.

கீழ்வாலை ஓவியத்தில் குதிரை காணப்படுவ தால் கி.மு. 500 என்று சிலர் கருதுகின்றனர்.

ஆனால், அறிஞர் சங்காலியா அவர்கள், 'குதிரை உருவத்தைச் சிந்துவெளி நாகரிகத்தி லேயே பார்த்ததாகப் புதுவையிலுள்ள அரவிந்த ஆசிரமத்தைச் சார்ந்த சேத்னா என்ற அறிஞர் தெரிவித்தார்' என்று கூறியுள்ளார்,

> 'குதிரை உருவத்தை வைத்துக்கொண்டு கீழ்வாலை ஓவியத்தைப் பிற்காலத்துக்குக் கொண்டு செல்லக் கூடாது'

என்று அவர்கருதுகின்றார்.

கீழ்வாலையில் காணப்படும் இந்த ஓவியங்களின் காலத்தைப்பற்றி டாக்டர் கே. வி. இராமன் அவர்கள்,

> 'இந்த ஓவியம் பழைய கற்கால நாகரிகத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம்'

என்று தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகக் கருத்தரங்கில் கூறியுள்ளார்.

திரு ஐ. மகாதேவன் அவர்கள் கி. மு. 500 என்று கூறியுள்ளார்.

என். எஸ். இராமசாமி என்ற அறிஞர் கிறிஸ்து நூற்றாண்டின்படி முன் (கி. மு.) முதல் ஆயிரம் நூற்றாண்டுகளில் இருக்கலாமென்று கருதுகின்றார். அதற்குக் காரணம் கீழ்வாலை ஓவியத்தில் ஒரு குதிரை காணப்படுவதைவைத்து, அக் குதிரையினது உருவம் சிந்துவெளி நாகரிகத்தில் மிகப் பிற்காலத்தில் காணப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

> கீழ்வாலைக் குன்றுகளில் உள்ள இந்த ஓவியங்கள் கி. மு. 500-லிருந்து கி.மு. 1000 ஆண்டுகளுக்கு உட்பட்டதாக இருக்கலாமென்று நான் கருதுகின்றேன்.

★

## பெயர் விளக்கம்

**1. பிராமி** Brahmi :

பிராமி எழுத்துகள் அசோகர் சாசனத்தில் ஜேம்ஸ் பிரின்செப் (James Princép) என்பவரால் கண்டுபிடிக்கப் பட்டன.

**2. எட்ருஸ்கன்** Etruscan :

உரோம் நாட்டின் அருகில் ஒரு கூட்டத்தினர் பேசிய மொழியாகும். இந்த எழுத்துகளை இதுவரை யாரும் படிக்க முடியவில்லை. A comparison between the sign of Indus script and sign in the corpus inscription Etruscarium—Indian Antiquary Vol. 213—15

**3. ஈஸ்டர் தீவு** Easter Island :

பசிபிக் தீவில் சிலி நாட்டிற்கு அருகிலுள்ளது. இவர்கள் போலினீசியர்கள் என்று சிலர் கருதுவார்கள். அவர்களுடைய எழுத்துகள் சிந்துவெளி நாகரிக எழுத்துகளைப் போல் இருக்கின்றன.

1) The Easter Island script and other scripts Rome, Vol: 8;5—27

2) Easter Island Script and the Script of Mohenja -daro, A BORL. Vol. 19: 122—6

**4. இட்டைட்டு Hittite :**

இட்டைட்டுகள் ஆரியருடன் தொடர்புடையவர்கள். அவர்களுடைய எழுத்துகள் படிக்கப்பட்டுள்ளன. The Hittite Idiographic writing—University of Chicago Press என்ற நூலில் விளக்கப்பட்டுள்ளது.

**5. அஸ்கோ பர்போலா Asko Purpola :**

பின்லந்து ஆராய்ச்சியாளர். அவருடைய 'Further progress in the' Indus Decipherment என்ற நூலில் சிந்து வெளி நாகரிக எழுத்துகளைப் பற்றி ஆராய்ச்சி செய்துள்ளார்.

**6. நார்சோ Knorsov :**

நார்சோ என்ற உருசிய நாட்டு அறிஞர் அரப்பா குறியீட்டெழுத்துகள் திராவிடர்களுடையதாக இருக்கலாமென்று சொல்லி உள்ளார். உருசிய அறிஞர் 'Soviet studies on Harappa Sciript' என்ற நூலை வெளியிட்டுள்ளார்.

**7. ஈராஸ் அடிகள் Rov. Fr. Heras:**

ஸ்பெயின் நாட்டில் இருந்து வந்தவர். பம்பாய் சவேரியார் கல்லூரியில் வரலாற்றுச் சங்கத்தை நிறுவிப் பல ஆராய்ச்சிகளைச் செய்து இருக்கின்றார். அவர் எழுதிய நூல்களில் 'அரவீடு அரச மரபு' (Araveedu Dynasty) என்பது முக்கியமானது.

8. எச். டி. சங்காலியா H. D. Sankalia

எச். டி. சங்காலியா அவர்கள் பழம்பெரும் ஆராய்ச்சியாளர் ஆவார். பூனாவில் தக்காணக் கல்லூரியில் (Deccan College) பேராசிரியராக இருக்கிறார். முக்கியமாக வரலாற்றுக்கு முற்பட்ட நாகரிகங்களை ஆராய்ந்துள்ளார்.

9. எஸ். ஆர். ராவ்:

இவர் லோத்தால் என்ற இடத்தைத் தோண்டி (Lathal) ஆராய்ந்தவர் ஆவார். அங்கிருந்த துறைமுகத்தைக் கண்டு பிடித்தவர்.

10. ஐ. மகாதேவன்:

Jawaharlal Nehru Fellowship பெற்று கணிப்பொறி ஆராய்ச்சி முறையால் குறியீடுகள் — எழுத்துகளை ஆராய்ந்தவர். அதற்கான ஒருசொல்லடைவு(Concordence) வெளியிட்டுள்ளார்.

1) A study of the Indus Script through bilingual Parallel.
2) Dravidian parallel in proto-Indian Script.

11. Fபேர் சர்வீஸ் Fair service:

The Harappan civilizatian of the Indus valley, A. P. S. 1960 year book.

12. பி. பி. லால் B. B. Lal:

From the Magalithic to the Harappan tracing back the graffition the pottery, AI No. 16:4 - 24

13. என். எஸ். இராமசாமி:

இந்தியன் எக்ஸ்பிரஸ் துணையாசிரியராக இருந்தவர்: வரலாற்று ஆராய்ச்சியாளர்.

14. கே. வி. இராமன்:

சென்னைப் பல்கலைக் கழகத்தில் தொல்பொருள் ஆய்வுத்துறையில் வரலாற்றுப் பேராசிரியராக இருக்கின்றார்.

15. பி. ஜோசப்:

1. The extent of Influence of the Indus Civilization JOR Volume 11:246-60
2. Dress in Mohenjadaro JUB Volume 6253-8.
3. The Near East and the Indus Valley: an Introductory comparative study of pre - historic Ceramic art. JUB Volume 12:7-17.
4. The Harappa Script - a tragedy in timing TC Volume 295 - 307.
5. The relative Chronology of Harappa. TC Volume 12 319 - 59.

★

## தமிழ் நாட்டில் சிந்துவெளி எழுத்தோவியம்

# சொல்லடைவு


அகழ்வாய்வு 10, 11, 54, 75
அசோகன் 76
அணுகுமுறை 11
அரப்பா 63
அரப்பா எழுத்து 53, 66, 68
அரவிந்த ஆசிரமம் 77
அலெக்ஷி 58
அறிவியல் 14
அனந்தபுரம் 9
அன்பு 13
அஸ்கோ பர்போலா 54, 56, 58, 60, 65
ஹல்லூர் 74, 75
ஹன்ட்டர் 55
ஆங்கிலம் 13, 14
ஆந்திர மாநிலம் 61
ஆரிய நாகரிகம் 54, 57
ஆரியர் 10, 12
ஆரியர் அல்லாதார் 55
ஆய்வுகள் 15
ஆய்வுக் கட்டுரை 14
ஆனைமலை 61
இட்டைட்டு எழுத்து
இண்டிகா 57
இதழியல் 14
இத்தாலி 64
இந்தியப் பண்பாடு 55
இந்திய வரலாற்று அறிஞர்கள் 12
இந்திய வரலாறும் தொல் பொருளும் சிலகூறுகள் 54
இந்தியா 61
இரண்டாவது உலகத்தமிழ் மாநாடு 63
இரத்தக் குடைக்கல் 71
இராமசாமி என். எஸ். 62
இராமசாமி ஐயர் பவுண்டேஷன் சி. பி. 60
இராஜஸ்தான் 74
இருக்கு வேதம் 54, 55
இருமொழிக் கல்வெட்டு 13, 55
இரும்பு 75
இலக்கிய ஆய்வு 14
இலக்கியத்தில் அறிவியல் 14
இலிங்கம் 10
ஈராஸ் அடிகளார் 10, 11, 12, 53, 54, 55, 56, 59, 60, 63, 64, 65, 66, 68, 70

ஈராஸ் அடிகளும்
இண்டஸ்
எழுத்துகளும் 57
ஈவிசி (அறிஞர்) 55
ஈஸ்டர் தீவு எழுத்து 53, 54
உரிமையாளர் 14
உருசிய நாடு 54, 57, 58
உருவப்படம் 12
உருவ முத்திரைகள் 56
உருவம் 12
உள்ளுணர்வு 65
ஊகம் 65
ஊக்கம் 15
எகிப்திய பட எழுத்து 13,
64, 65
எகிப்திய மொழி 13
எகிப்தியன் ஓவியம் 69, 70
எகிப்தியன் பண்பாடு 56
எட்ருஸ்கன் எழுத்து 53, 54
எமனோ 59
எலமைட் நாகரிகம் 57, 65
எழுத்துகள் 10, 62, 64, 76
ஓசிரிஸ் (Osiris) 70
ஒளிப்படம் 60
ஓரஸ் (Horus) 70
ஓவியம் 12, 61, 62, 69
கடப்பா மாவட்டம் 61
கடல்வழி 75
கட்டுரை 12, 13, 14
கணிப்பொறி 12, 54, 58
கராசிமா 64
கராச்சி 58
கருத்தரங்கு 63, 76
கருத்து 11, 12, 13
கருப்பு — சிவப்பு
மட்பாண்ட ஓடு 75, 76
கருமுத்து தியாகராயச்
செட்டியார் 63
கலப்பு நாகரிகம் 55
கல்வெட்டு எழுத்து 14, 75
கார்டன் 56
கார்பன்—14. 74
காலாண்டு வெளியீடு 13
காலிபங்கன் 11
கிருஷ்ணமூர்த்தி, கோ. 9
கிரேக்க மொழி 13, 64
கிரேடன் 55, 56
கீத் 55
கீழ்வாலை 9, 10, 11, 60,
62, 64, 65, 66, 68, 71, 76, 77
கீழ்வாலை ஓவியம் 12, 13,
59, 60, 61, 64, 65, 69, 77
குதிரை 71, 75, 76, 77
குருராஜராவ் 75
குளிர்சுனை 62
குறிகள், குறியீடுகள் 11, 12
56, 61, 65, 66, 68, 69, 70
74, 76
குறியீட்டு எழுத்துகள் 11,
12, 74
குறுக்குக் கோடுகள் 8. 68
குறை 11
குஜராத் 11, 54, 60
கூட்டெழுத்துகள் 66
கொன்றாட்டா 58
கோதாவரி ஆறு 74

கோயமுத்தூர் 62
சங்க இலக்கியம் 14
சங்க நூல்களில் மணிகள் 14
சங்க நூல்களில் மீன்கள் 14
சங்க நூல்களில் விந்தைப் பூச்சி 14
சங்காலியா எச். டி. 57, 58 59, 60, 61, 76
சந்தா 55
சருபு 55
சாம்பல்நிற ஓடுகள் 75
சாம்பில்லியன் 64
சார்டன் ரோஸ் 55
சிந்துவெளி எழுத்துகள் 58, 60. 62, 75
சிந்துவெளிக் குறியீடுகள் 9, 10, 12, 13, 53, 54, 58, 59, 60, 61, 65, 66, 67, 76
சிந்துவெளி நாகரிகம் 10,12, 13, 15, 53, 55, 57, 59, 60, 62, 63, 64, 65, 66, 68, 69, 74, 76, 77
சிறுவன் 64, 65
சிற்பங்கள் 10, 57
சுடுபானை 56
சுந்தரம் 14
சுப்பாராவ் 74
சுப்பிரமணியம் டாக்டர் வ. அய். 13, 63, 64
சுமேரிய-எகிப்திய நாகரிகம் 56
சுமேரிய முத்திரை 66
சூரியன் 69, 70, 71
சூரியனின் குறியீடு 70, 71
செத்தவரை 62
செப்புக்காலக்குறிகள் 58,59
செப்புக்கால நாகரிகம் 59, 74, 76
செம்மண் 71
செய்தித்தாள் 9
சென்னை 14, 56, 60
சேகர் பதிப்பகம் 14
சேத்னா 77
ஜப்பான் 64
ஜான்மார் 12
ஜான் மார்ஷல், சர். 10, 55
டெமாடிக் (மொழி) 13
தக்காணம் 59
தஞ்சாவூர் 13, 62, 67
தமிழக அரசு 11
தமிழினம் 15
தமிழ் நாடு 11, 59, 61
தமிழ்ப் பண்பாடு 63
தமிழ்ப் பல்கலைக் கழகம் 13, 62, 67, 77
தமிழ் மாணவர் 15
தருமபுரி மாவட்டம் 61
தலை அலங்காரம் 68, 71
தலைவர் 10, 15
தவறு 11
தனிநாயகம் அடிகள் 63
தாமஸ் எங் 65
தாய்த் தெய்வம் 10, 71, 72
திசை 70
திராவிட எழுத்து 53
திராவிட மொழி 63

திராவிட வேர்ச்சொல்
அகராதி 59
திராவிடர்கள் 12, 13, 74, 75
திருக்கோயிலூர் 11, 61
தி வீக்லி 62
துடுப்பு 71
துணைவேந்தர் 13, 62, 63, 64, 65, 67
துளையிட்ட பழைய
நாணயம் 56
தூய சவேரியார் கல்லூரி 10
தெய்வம் 68
தென்இந்தியா 58, 60, 75,76
தென்னார்க்காடு மாவட்டம் 53, 61
தொழிலதிபர் 63
தொல்பழங்கால நடுநில
இந்துப் பண்பாட்டின்
ஆய்வு 10
தொல்பழந் திராவிடம் 56
தொல்பொருள் ஆய்வுத்
துறை 9, 11, 14
தொன்மைச் சிறப்பு 15
நடு இந்தியா 74
நடுநிலக்கடலக நாடுகள் 56
நன்றி 13
நாகரிகம் 10, 13
நார்சோ 54, 58
நான்கு கோடுகள் 68
நூல் 12, 14, 15
பசுபதி 10
பஞ்சாப் 67
படகு 68, 69, 70
படங்கள் 14
பண்பாட்டுக் கூறுகள் 56
பதிப்பகம் 14
பதிப்பாளர் 14
பம்பாய் 10
பயணம் 70, 71
பர்ரோ 59
பலி 72
பலுசிஸ்தானம் 67
பழங்காசு 76
பழந்திராவிடக் குறியீடுகள் 12, 59
பழந்திராவிடம் 10, 54, 55 58, 59
பழைய கற்காலம் 77
பறவை 69
பற்று 12
பாகூர் 9
பாறை ஓவியம் 9, 10, 11, 75
பிம்பட்கா 61
பிராமி 53, 75
பிரான்நாத் 54
பின்லந்து 54, 56, 57, 60
புகைப்படம் 60
புதிர் 11
புதுக் கற்கால நாகரிகம் 74, 76
புதுவை 53, 77
புதுவை வரலாற்றுக் கழகம் 9, 11, 15, 53
புதுவை வரலாற்றுச் சங்கம் 64

புரட்சி 9
புலவர் 9
புறாக்கல் 62
பெண் தெய்வம் 71
பெண் தேவதை 70
பெருங் கற்கால நாகரிகம் 74, 75, 76
பேராசிரியர் மகாலிங்கம் 76
Fபேர் சர்வீஸ் 58, 59, 60
போனீசியன் எழுத்துகள் 66
மகாதேவன் ஐ. 54, 64, 77
மட்பாண்ட ஓடுகள் 64
மண்பாத்திரங்கள் 67, 74
மதுரை 63
மத்தியப் பிரதேசம் 61
மலைப்பட்டி 61
மலையின் குறியீடு 68
மறையூர் 61
மனித ஓவியங்கள் 12
மாட்டு உணவுத்தொட்டி 67
மாட்டுச் சந்தை 67
மார்ட்டிமர் வீலர் 74
முத்திரை 11, 13
மெசபடோமியன் நாகரிகம் 55
மொகஞ்சதாரோ 70
மொகஞ்சதாரோ எழுத்துகள் 12, 63
மொழி 13
மோட்சம் 72
யோனி 10
ரா (Ra) 70
ராவ், எஸ்.ஆர். 54, 57 58,60
ரோசட்டா முத்திரை 13,64
லாங்டன் 54
லால் (B. B. Lal) 74
லோத்தால் 11, 54, 60
வடஇந்தியா 59
வட்டத்திற்குள் ஆறு கோடுகள் 68
வரலாற்றறிஞர்கள் 11
வரலாறு 14
வரலாற்றுக் கழகம் 10
வரலாற்றுக்கு முற்பட்ட ஓவியங்கள் 9, 53, 61, 62
வரலாற்றுத்துறை 9
வல்லூறு 70
வானத்திற்குப் பயணம் 70
விசித்திரம் 71
விலங்கு 12
விழுப்புரம் 9, 11, 53
வில்லியனூர் 9
வெளிநாட்டறிஞர்கள் 12
வெள்ளையாம்பட்டு 14
வேங்கடேசன் ந. 9
வேடல் 54
வேட்டைக்காரன் மலை 62
வேதகாலம் 55

முற்காலக் குறியீடுகள்



## சேகர் பதிப்பகத்தின்
# சிறந்த வெளியீடுகள்

**பி. எல். சாமி ஐ. ஏ. எஸ.**

| | | |
|---|---|---|
| *சங்க நூல்களில் மணிகள்* | 10 | 00 |
| *,, விந்தைப் பூச்சி* | 5 | 00 |
| *இலக்கியத்தில் அறிவியல்* | 15 | 00 |
| *இலக்கிய ஆய்வு* | 17 | 00 |
| *தமிழ்நாட் டில் சிந்துவெளி எழுத்தோவியம்* | 8 | 00 |
| *சங்க நூல் ளில் மீன்கள்* | (மறுபதிப்பு-அச்சில்) | |
| Common na ...Flora and Fauna | 3 | 00 |

**சிலம்புச் செல்வர் ம. பொ. சி.**

| | | |
|---|---|---|
| *கல்வி மொழி தமிழா, ஆங்கிலமா?* | 3 | 50 |
| *கம்பரும் காந்தியடிகளும்* | (மறுபதிப்பு - அச்சில்) | |

**டாக்டர் கி. வேங்கட சுப்பிரமணியன்**

| | | |
|---|---|---|
| *கற்றதனால் ஆய பயன்* | 8 | 00 |

**டாக்டர் ஔவை. நடராசன்**

| | | |
|---|---|---|
| *கம்பர் காட்சி* | 13 | 50 |

**பேராசிரியர் மா. ரா. இளங்கோவன்**

| | | |
|---|---|---|
| சிலம்புச் செல்வரின் தலையங்க இலக்கியம் | 16 | 00 |
| அறிவுலகின் குருதேவர் (தெ. பொ. மீ.) | 14 | 00 |
| இந்திய இதழ்கள் | 15 | 00 |
| முற்காலத் தமிழ் இதழ்கள் | (மறுபதிப்பு அச்சில்) | |
| இதழியல் நோக்கு | | |
| முதல் நாளிதழ்கள் மூன்று | 12 | 00 |
| கலையும் வாழ்வும் | 8 | 00 |

**பன்மொழிப் புலவர் இரா. மதிவாணன்**

| | | |
|---|---|---|
| சொல்லாய்வுக் கட்டுரைகள் | 16 | 00 |

**அ. வெ. சுப்பிரமணியன்**

| | | |
|---|---|---|
| சங்கப்பாட்டில் பொங்கும் உணர்ச்சி | 12 | 00 |
| The Bangle and the Javelin | 32 | 00 |

**புலவர் சு. குப்புசாமி**

| | | |
|---|---|---|
| மலையமான்கள் | 9 | 00 |

**வில்லியனூர் புலவர் ந. வேங்கடேசன்**

| | | |
|---|---|---|
| வரலாற்றில் வில்லியனூர் | 12 | 00 |
| வரலாற்றுச் சின்னங்கள் | 8 | 00 |

**கவிஞர் செவ்வேள்**

| | | |
|---|---|---|
| கம்பன் சுவை | 6 | 25 |

புலவர் மு. த. வேலாயுதனார்

| | | |
|---|---|---|
| கடல் வாணிகமும் தரை வாணிகமும் | 10 | 75 |
| கம்ப ஓவியத்தில் ஆன்மீகமும் அறநெறியும் | 6 | 00 |

முத்து. எத்திராசன் எம். ஏ., பி. எட்.,

| | | |
|---|---|---|
| கம்பர் காட்டும் கார்காலம் | 6 | 25 |
| சொல்லரங்கம் | 6 | 00 |

திருமதி ராதா ரமணன் எம். ஏ., எம். எட்.,

| | | |
|---|---|---|
| பாரதி நோக்கில் பெண்மை | 8 | 00 |

டாக்டர் ச. ஜெகத்ரட்சகன் எம். எல். ஏ.,

| | | |
|---|---|---|
| பாரதியும் பாரதிதாசனும் | 12 | 00 |
| கறுத்த மக்களின் உரத்த குரல்கள் | 10 | 75 |
| சாதனைப் பூவின் சரித்திர வசந்தம் (எம். ஜி. ஆர்.) | 20 | 00 |

மு. பரமசிவம் (தொகுப்பு)

| | | |
|---|---|---|
| விந்தனும் விமர்சனமும் | 9 | 00 |

புலவரேறு அரிமதி தென்னகன்

| | | |
|---|---|---|
| அழகோவியம் | 9 | 00 |
| ஊதுகிறேன் சங்கு | 10 | 00 |

கதர் அ. வை. குப்புசாமி

| | | |
|---|---|---|
| கடல் பூக்கள் | 10 | 00 |
| அநுபவ மொழிகள் | 12 | 50 |

| | | |
|---|---|---|
| **பேராசிரியர் த. பழமலய்** | | |
| *நெஞ்சில் நிறைந்தவர்* | 8 | 50 |
| **கவிஞர் டாக்டர் பாலதண்டாயுதம் எம். பி. பி. எஸ்.,** | | |
| *இன்னொரு முகம்* | 8 | 00 |
| **மூவர்—தொகுப்பு** | | |
| *உரைவேந்தர் ஔவை* | 5 | 50 |
| **பேராசிரியை கோ. சு. சாந்தா** | | |
| *பெண்மையின் உண்மை (பெண்களின் குரல்)* | 10 | 00 |
| **மு. வளர்மதி** | | |
| *மானுட விடுதலை இங்கர்சால்* | 12 | 00 |
| **கோகிலா சுந்தரம்** | | |
| *மங்கையர் சாதனைகள்* | 6 | 50 |
| **வே. இளந்திரையன் எம். ஏ.,** | | |
| *வண்ணப் பறவைகள்* | 9 | 00 |
| **கே. எஸ். லட்சுமணன்** | | |
| *பேரறிஞர்களின் உவமைகள்* | 6 | 50 |
| **புலவர் க. அரசுமணி** | | |
| *புத்துலக வழிகாட்டிகள்* | 6 | 50 |
| **வெள்ளையாம்பட்டு சுந்தரம்** | | |
| *தாயுமானார் கதை* | 7 | 00 |
| *ஞானியாரடிகள்* | 7 | 00 |
| *ம. பொ. சி. படைத்த புதிய தமிழகம்* | 16 | 00 |

**வெங்கடாசலம்**

வ. உ. சி. கடிதங்கள்

**புலவர் தாமரைக் கண்ணன்**

வரலாற்றுக் கருவூலம்

**புலவர் த. கோவேந்தன்**

என் நினைவுகளில் பாவேந்தர்

**அருட்கவி அரங்க. சீனிவாசன்**

காவடிச் சிந்தும் கவிஞன் வரலாறும்









இந் நூலாசிரியர்

பி. எல். சாமி ஐ. ஏ. எஸ்.

அவர்கள்

PRINTED BY
PELICAN INDIA
MADRAS-600 017